# 'மாவையிலிருந்து பொலிசாரை அகற்றுவதாக கூறவில்லை'

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

கல்வனைஸ்ட்
தண்ணீர் தாங்கிகள்
(G I Water Tank)
400 கலன்களிலும்
மற்றும் தேவையான அளவுகளிலும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 161
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் ஆடி 6 ஜமா. அவ் 17 புதன்கிழமை [22-7-70]



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

## உதவி அமைச்சர் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன் "மாவிட்டபுரம் ஆலய வாசலில் கடமையாற்றி வரும் பொலிசாரை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக நான் யாரிடமும் கூறவில்லை" என்று இப்போது யாழ்ப்பாணத்திலிருக்கும் உதவி கலாசார மந்திரி திரு சோமவீர சந்திரசிறி நேற்று நமது பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

"மாவை ஆலய திருவிழாக் கால நிர்வாகியாக இருக்கும் திரு ஸி. சுந்தரலிங்கம் எனது நீண்டகால நண்பர். 1947-ம் ஆண்டில் ஆட்சிமன்றத்தில் ஏற்பட்ட உறவு இன்னும் முறிந்துவிடவில்லை. மாவை ஆலயப் பகுதிக்கு நான் சென்றபோது திரு. சுந்தரலிங்கத்தையும் சந்தித்தேன். பல விஷயங்கள் பற்றியும் இருவரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டோம் அப்போது, "இந்தப் பொலி

(4-ம் பக்கம்பார்க்க)

# அரசியல் நிர்ணயசபை ஏகமனதாக நிறைவேறியது

# 1970 முடிய முன் இலங்கை குடியரசு நாடாகும்

## 'குடியரசானலும காமன்வெல்த் உறவு நீடிக்கவேண்டும்'

### அரசியல் நிர்ணயசபை விவாதத்தில் டட்லி

கொழும்பு, செவ். இலங்கையை ஒரு சோஷலிஸக் குடியரசு நாடாகப்பிரகடனப்படுத்துவதற்காக புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சியை முன்னாள் பிரதமரும் ஐக்கியதேசியககட்சியின் தலைவருமான திரு. டட்லி சேனநாயக்கா இன்று ஆட்சிமன்றக்கட்டிடத்தில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபையாக மாறக் கோரும்பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் வரவேற்ருர்.

இலங்கை ஒரு சோஷலிஸ குடியரசாக மாறினலும் வர்த்தகம், பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு தொடர்ந்தும் காமன்வெல்த்தில் அங்கம் வகித்து வரவேண்டுமென்று திரு. டட்லி சேனநாயக்கா கேட்டுக்கொண்டார்.

இந்தியாவும் இலங்கையும் தேயிலை உற்பத்திசெய்யும் பெரிய நாடுகளென்று குறிப்பிட்ட முன்னுள் பிரதமர், இந்தியா குடியரசு நாடான போது காமன்வெல்த்திலிருந்து அது வெளியேறவில்லையென்றும் தொடர்ந்தும் அதில் அங்கம் வகித்துவந்ததால் பொருளாதார நன்மைகளை அது பெற்றிருக்கிறதென்றும் கூறினர்.

## அரசியல் நிர்ணயசபை நிகழ்ச்சி திரைப்படமாகும்

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக ஆட்சி கட்டடத்தில் நடைபெறவிருக்கும் அரசியல் நிர்ணய

## வீடமைப்பு பற்றி வெளிநாட்டு விபரம்

கொழும்பு, செவ்வா

## தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் ஆதரவு; 29-ம் திகதி முதல் தடவையாக சபை கூடும்

(நமது கொழும்பு நிருபர் வெரி. சுந்தரலிங்கம்)

**அரசியல் நிர்ணய சபையாக ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இயங்குவதற்கு அதிகாரம் வழங்கும் பிரேரணை நேற்று ஏகமனதாக ஆட்சி மன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் எம். பி. க்கள் உட்பட சகல உறுப்பினர்களும் ஏகமனதாக வாக்களித்தனர். இலங்கையை ஒரு சர்வ சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தும் அரசியல் அமைப்புத் திட்டத்தை வகுப்பதற்கு ஓர் அரசியல் நிர்ணய சபையயினராக இம்மாதம் 29-ம் திகதியிலிருந்து ஆட்சிமன்ற உறுப்பினர்கள் செயல்படுவர்.

அரசியல் நிர்ணய சபை மீதான விவாதம் ஆட்சிமன் றத்தில் கடந்த ... நடைபெற்ற ... வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ... வித்தார்.

சில வட்டாரங்களில் ... போல ஏற் ... தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்புத்திட்டம் எம்மிடம் இல்லை

எந்த ரீதியில் செயற்படுத்தப்படும் என்பதை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை முற்றிலும் வாசிப்போருக்குத் தெரியும். தேர்தலுக்கு 3 வருடங்களுக்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவீப்முடிவுகள்

# அரசியல் நிர்ணயசபை நிகழ்ச்சி திரைப்படமாகும்

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக ஆட்சி மன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களாக மாறி இம்மாதம் 29-ம் திகதி ஆட்சிமன்றக் கட்டடத்தில் நடைபெறவிருக்கும் அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போது, சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த அந் நிகழ்ச்சிகள் தகவல் பகுதியினரால் திரைப்படமாக்கப் படும்.

திரைப்படம் எடுப்பதற்கான மின்சார இணைப்புகள் மற்றும் ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டுள்ளன.

## பதவிஉயர்வுடன் இடமாற்றம்

தாவடி, செவ்வாய்

கோண்டாவில் மேற்கு சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையில் சிரேஷ்ட உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய பண்டிதர் திரு. இ. இராசலிங்கம் இம்மாதம் 19-ம் திகதியிலிருந்து இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## நாடகவிழா

யாழ்ப்பாணம், புதன்

உரும்பராய் மேற்குகிராம முன்னேற்றச் சங்கம் இவ்வாரம் நடத்தவிருந்தநாடக விழாவைக் கைவிட்டுள்ளது.

# கல்வி அமைச்சுசுற்றுநிருபம்: பாடசாலைகளில் குழப்பநிலை

பருத்தித்துறை, செவ்வாய்

இவ்வாண்டு மூன்ருவது தடவையாக மாணவர் க.பொ.த (சாதாரணம்) பரீட்சை எடுக்கலாம் என்று கல்விஅமைச்சுவிடுத்த சுற்றுநிருபம் பாடசாலைகளில் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலையிலிருந்து விலகிய பல மாணவ-மாணவியர் மீண்டும் பாடசாலைகளுக்குப்படையெடுக்க ஆரம்பித்துள்ளமையால் பலபாடசாலைகளில் இட நெருக்கடி ஆசிரியர் பற்ருக்குறை, புதிய நேரசூசிகை ஆகிய பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

அமைச்சின் சுற்று நிருபத்தின் முன்னரே, பல மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக இவ் வாண்டு டிசம்பரில் நடக்கவிருக்கும் பரீட்சைக்கான முத்திரைகளுடன் மனுப்பண்ணி விட்டனர். அவர்கள் பாடசாலை மாணவராகமனுப்பண்ணுவதாயின் அதற்கான முத்திரைப் பணத்தைச் செலுத்த வேண்டுமெனப் பாடசாலை அதிபர்கள் சட்டரீதியாக வற்புறுத்துகின்றனர். இந் நிலையில்தாம்தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக மனுப்பண்ணியபோது செலுத்திய முத்திரைப் பணம் தமக்கு கிடைக்குமோவென மாணவர் மனம் கலங்கிய நிலையில் உள்ளனர்.

## வடபகுதி அசைஸ் விசாரணை

# வழக்கறிஞர்கள் நேற்று தொகுப்புரை நிகழ்த்தினர்

யாழ்ப்பாணம், புதன்

புலோலி கொலை முயற்சி வழக்கில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. குமார் அபயசேகராவும் எதிரிகளின் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ் சண்முகநாதனும் நேற்று தொகுப்புரையை முடித்துக் கொண்டார்கள். இன்றுகாலைநீதியரசர் உரை நிகழ்த்திய பின்னர் தீர்ப்பு வழங்கப்படும்.

இவ்வழக்கு நேற்று முன் தினம் வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல் சிறிமானே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

இவ்வழக்கில் புலோலியில் 69ம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி வடிவேலு இராசரத்தினம் என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக, கணபதிப்பிள்ளை தினகரிப்பிள்ளை பரஞ்சோதி திருநாவுக்கரசு ஆகியோர் மீதுகுற்றம் சாட்டப்பட்டுள்ளது

வடிவேலு இராசரத்தினம், கிளிநொச்சி வைத்திய அதிகாரி டாக்டர் ரி. ஞானசுந்தரம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

## வீடமைப்பு பற்றி வெளிநாட்டு விபரம்

கொழும்பு, செவ்வா

குறைந்த வருமான முள்ளவர்களின் வீட்டில்லாப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கப்பூர் மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் பல மேற்கொண்டுள்ள வெற்றிகரமான திட்டங்கள் பற்றி ஆராய்ந்தறிக்கை சமர்ப்பிக்கும்படி சிங்கப்பூரிலும்இதர தென் கிழக்காசிய நாடுகளிலுமுள்ள இலங்கைத் தூதகங்களை அரசாங்கம் கேட்டிருக்கிறது.

## மேலும் நான்கு வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் விசாரணைக்கு மேலும் 4 வழக்குகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 10 கொலைவழக்குகளும், கொலை முயற்சி வழக்கும், விசாரணைப் பட்டியலில் இருந்தன.

வவனியா கற்பழிப்பு வழக்கு, உயிலங்குளம் கொலை வழக்கு. உடுப்பிட்டி கொலை முயற்சி வழக்கு, கண்டாவளை கொலைமுயற்சி வழக்கு ஆகியவை புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

## இலங்கை வியட்நாம் ராஜஉறவு

கொழும்பு, செவ்

இலங்கை அரசாங்கமும் வியட்நாம் ஜனநாயக குடியரசின் அரசாங்கமும் தூதரக மட்டத்தில் ராஜாங்க தொடர்புகளை ஏற்படுத்த சட மதித்துள்ளன. கடந்த மாதம் வியட்நாம் அரசாங்கத்தை இலங்கை அங்கீகரித்துள்ளது

யாழ்ப்பாணம், புதன்

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி திறந்தவெளியரங்கில் இன்று மாலை கலாசார உதவி மந்திரி திரு சோமவீர சந்திர சிறீயை கௌரவிக்குமுகமாக வரவேற்புக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தை யடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே வி என் சண்முகநாதன் அட்வகேட் ஆர் கோபாலரத்தினத்தின் உதவியுடனும், புறக்டர் வேலும்மயிலும், புறக்டர் எஸ் பாலேந்திரா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

அரசியல் நிர்ணய சபை மீதான விவாதம் ஆட்சிமன்றத்தில் கடந்த3 தினங்களாக நடைபெற்றபின்னர் நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

திரு ஸ்ரான்லி திலகரத்ன தலைமையில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர்.

பிரேரணையை சமர்ப்பித்து அரசியல் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர்டி சில்வாபேசினர். இந்த வருட இறுதிக்குள் இலங்கை மக்கள் தங்களை ஒரு சோஷலிச ஜனநாயக் குடியரசு மக்களாகஉலகத்துக்கு பிரகடனப்படுத்திக் கொள்ளுவார்கள்என்று டாக்டர் கொல்வின் தெரிவித்தார்.

சில வட்டாரங்களில் கூறப்படுவது போல ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்புத்திட்டம் எம்மிடம் இல்லை புதிய அரசியல் அமைப்பு திட்டத்தை தயாரிக்கும் அதிகாரம் அரசியல் நிர்ணயசபைக்கும் அதில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்களுக்குமே உண்டு. புதிய அரசியல் திட்டத்தில் சகல இன சமயத்தினரும் மதத்தினரும் சமமாக நடத்தப்படவும் அவர்களது கலை கலாச்சார உரிமைகளைப் பேணவும் உரிமை வழங்கப் படும்' என்று டாக்டர் கொல்வின் கூறினர்.

கொல்வின் மேலும்பேசியதாவது:

''ஜனநாயக உரிமைகள் எந்த ரீதியில் செயற்படுத்தப்படும் என்பதை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை முற்றிலும் வாசிப்போருக்குத் தெரியும். தேர்தலுக்கு 3 வருடங்களுக்கு முன்னரே அரசியல் நிர்ணய சபை சம்பந்தமான எண்ணம் ஐக்கிய முன்னணியினருக்கு இருந்து வந்தது. எமக்கு 115 ஸ்தானங்க கிடைத்தாலென்ன, கிடைக்காவிட்டால் என்ன? அல்லது மூன்றில் இரண்டு பங்கு வந்தாலென்ன வராவிட்டால் என்ன நாம் அரசியல் நிர்ணய சபை நிறுவுவது சம்பந்தமாக இப்போது எடுத்த நடவடிக்கைகளையே மேற்கொண்டிருப்போம். இது ஒரு தேசிய முயற்சியாக சகலரும் நினைக்க வேண்டும்''

# தமிழரசு ஆதரவுக்கு பெருமகிழ்ச்சி

—பீலிக்ஸ்

உள்ளூராட்சி வெளிவிவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசுகையில், ''தமிழரசு எம். பிக்கள் இதில் பங்குபற்றி, முழு ஆதரவு தந்துள்ளமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இனிமேல் எதிர்க் கட்சிகள் என்ருே, அரசாங்க கட்சிகள் என்ருே கட்சி ரீதியாக அரசாங்கம் செயல்பட மாட்டாது. ஆதலால் கட்சிக்கொள்கைகளை புறம்பாக வைத்துவிட்டு சகலரும் இந்நாட்டு மக்கள் என்ற நினைவில் ஒரே நாட்டினராக வாழமுற்படுவோம் என்று கூறினர்,

சமஷ்டிக் கோரிக்கையை இலங்கையில் எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளமாட்டாதென்பதை தெரிந்திருந்தும்கூட தமிழரசுக் கட்சியினர் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை நிறுவும் எமது நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்து கூட்டத்துக்கு வந்திருப்பதற்குக் காரணம் தாங்கள் சொல்ல வேண்டியதை விளங்கப் படுத்துவதினுல் தங்களது கருத்துக்களுக்கும் அரசியல் நிர்ணயசபையில் மதிப்புத் தருவார்கள் என்ற எண்ணத்தில்தான். சிறுபான்மையினருக்கு பிடிக்காத, அவர்களது அபிலாசைகளுக்கு மாறுபட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தை பலாத்கார முறையில் அமுல் நடத்தும்நோக்கம் எம்மிடம் இல்லை. இதைத் தமிழ்மக்களும் உணர்ந்திருக்கிருர்கள். நாம் எமது நாட்டின் பொதுஎதிரிகளானஏகாதிபத்திய வாதிகளைத்தான் எதிர்க்கிருேம் உங்கள் கருத்துக்கும் மதிப்புத் தரப்படும்என்று திரு பீலிக்ஸ்டயஸ் பண்டார நாயகா கூறினர்.

# ஜூலை 19ம் திகதியை சுதந்திரதினமாக்குக

—கா. பொ.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், ''பெப்ருவரி மாதம் 4-ம் திகதி சுதந்தினமாக கொண்டாடப் படுவதில் இனிமேல் அர்த்தமில்லை. ஜூலைமாதம் 19-ம் திகதியை சுதந்திர தினமாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு. தேவநாயகம் எம். பி. (யு. என். பி), கல்வி அமைச்சர் ஜனுப் பதியுதீன் மஹ்மூத் ஆகியோரும் பேசினர்.

இன்றைய சபைநிகழ்ச்சிகள்யாவும் திரைப்படமாக்கப்பட்டன.

## வீதி திருத்தப்படுகிறது

மாவிட்டபுரம், செவ்.

ஏழாலை தென் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க தலைவர் திரு. இ. பாலசுப்பிரமணியம் தலைமையில் ஏழாலை ஏழுகோவிலடி வீதி செப்பனிடப்பட்டுவருகிறது

இதற்கு அரசாங்கம் 2000 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

## நாடு திரும்பினார்

சென்னை, ஜூலை 21

ஐரோப்பிய நாடுகளில் 3 வாரகால சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருந்த தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி இன்று மாலை சென்னை திரும்பினர்

முதலமைச்சருக்கு மீனம்பாக்க விமான நிலையத்தில் அரச மரியாதைகளுடன் வரவேற்புஅளிக்கப்பட்டது விமானம் ஒன்று தாழப் பறந்து பூமாரி பொழிந்தது. திறந்த காரில் ஊர்வலமாக அவரது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

# சுவீப்முடிவுகள்

கொழும்பு, புதன்

நேற்று இழுக்கப்பட்ட 308-வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு

15 J 0463 ரூ 88,190

2-வது பரிசு

20 T 0088 ரூ. 35,276

3-வது பரிசு

16 V 0269 ரூ. 8,819

தலா ரூபா 440- 95 பரிசு பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 21 Y 0385 | 16 C 0411 |
| 15 H 0392 | 29 Y 0081 |
| 02 Q 0795 | 21 R 0457 |
| 09 A 0411 | 04 Y 0111 |
| 25 D 0836 | 35 Q 0242 |
| 07 L 0671 | 33 U 0317 |
| 37 S 0023 | 19 Y 0118 |
| 07 Y 0082 | 16 V 0161 |
| 29 C 0147 | 10 R 0810 |
| 36 H 0381 | 36 J 0818 |
| 14 Z 0162 | 02 V 0984 |
| 36 E 0334 | 36 G 0056 |
| 26 M 0255 | 19 J 0432 |
| 21 R 0933 | 23 P 0030 |
| 06 H 0822 | 03 S 0725 |
| 01 E 0656 | 33 C 0849 |
| 36 H 0706 | 34 V 0767 |
| 37 E 0613 | 17 S 0890 |
| 17 J 0569 | 30 O 0687 |

| | |
|---|---|
| 01 H 0102 | 24 V 0349 |
| 07 Y 0319 | 18 F 0968 |
| 24 P 0913 | 20 N 0141 |
| 31 C 0589 | 11 V 0298 |
| 12 T 0678 | 03 C 0696 |
| 30 M 0096 | 16 F 0711 |
| 35 H 0592 | 15 B 0668 |
| 15 S 0071 | 12 P 0260 |
| 30 Q 0333 | 03 T 0238 |
| 34 W 0572 | 10 F 0528 |
| 10 E 0365 | 09 K 0905 |
| 03 V 0349 | 04 R 0856 |
| 22 L 0387 | 28 B 0053 |
| 18 X 0123 | 32 J 0593 |
| 19 V 0871 | 11 T 0152 |
| 37 U 0507 | 22 P 0548 |
| 15 J 0019 | 34 Q 0489 |
| 10 O 0415 | 12 U 0407 |
| 02 X 0372 | 12 Q 0752 |
| 16 M 0705 | 37 Q 0355 |
| 29 R 0332 | 36 N 0551 |
| 31 Q 0150 | 21 N 0895 |
| 34 A 0155 | 20 P 0299 |
| 16 O 0179 | 28 E 0411 |
| 26 B 0658 | 29 W 0101 |
| 37 Q 0201 | 21 F 0203 |
| 28 O 0911 | 14 D 0299 |
| 04 M 0222 | 26 M 0267 |
| 27 J 0761 | 26 Z 0498 |
| 10 N 0086 | 01 D 0927 |
| 01 R 0995 | 23 E 0438 |

இவையாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்)

# உறவினர் பெயரில் முதலாளிகள் பெருநிலம் வைத்திருக்கிறர்களாம்

— நமது நிருபர் கே. கணபதிப்பிள்ளை —

விஸ்வமடு, செவ்

தமது செல்வாக்கைப் பாவித்து ஏக்கர் கணக்கில் காணிகளை வெட்டி தமது சொந்தக்காரர்களின் பெயரில் அககாணிகளைப் பதிந்து வைத்திருக்கும் முதலாளிகளுககு ஆபத்து ஏற்பட இருக்கிறது. குறிப்பாக கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த 'பெரிய கைகள்' மீது தான் முதலில் நடவடிககை எடுககப்படுமென நம்பப்படுகிறது கிளிநொச்சித்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக கிளையின் ஏழு பேர் கொண்ட அங்கத்துவக் கோஷ்டி ஒன்று காணி அமைச்சர் திரு கொப்பகட்டுவவால் சமீபத்தில் நியமிககப்பட்ட நெற்காணி நிலத் திட்ட அமைப்பாளர் ஒருவரிடம் முறையிட்டதை தொடர்ந்தே இவ்விஷயம் உடனடியாக அமைச்சர் கவனத்திற்கு எடுககப்பட்டதாக அறியப்படுகிறது.

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள முதலாளிகள் சிலர் தமது செல்வாககைப் பாவித்து ஒரு தொகை ஏககர் கணககில் காணிகளை வெட்டித் தமது சொந்தக காரர்கள் பெயரில் பதிந்து வைத்திருககிருர்களென்றும். இதைபறிமுதல் செய்து இப்பகுதியிலுள்ள இருக்கஇடமின்றி இருக்கும் ஏழைவிவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்றும் அந்தக் கோஷ்டியமைப்பாளரிடம் தெரிவித்துள்ள அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக அமைப்பாளர் உறுதியளித்துள்ளார்.

## மின்சாரம்

மாவிட்டபுரம், செவ்

குப்பிளான் கிராமத்துக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கஇருக்கிறது.

ஏழாலை கிராம சபைககூட்டம் கிராம சபைத் தலைவர் திரு. க. சிவகுரு தலைமையில் நடைபெற்றபோதே குப்பிளான் கிராமத்துககு மின்சாரம் வழங்குவதென முடிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய சனசமூக நிலையம் வெற்றி

புதுக்குடியிருப்பு, செவ். புதுக்குடியிருப்பு மத்திய சனசமூகநிலைய கரபந்தாட்டக் கோஷ்டிக்கும் தனியூற்று மாமூலை சனசமூகநிலைய கரபந்தாட்ட கோஷ்டிக்குமிடையில்மாமூலை சச நிலைய மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான போட்டியில் மத்திய சனசமூக நிலைய கோஷ்டியினர் 15-4, 15-1 புள்ளிகளைப்பெற்று வெற்றி பெற்றது.

## வரி விளம்பரம்


### வகுப்புகள்

பார்மசிஸ்ற் பரீட்சைக்கு (External Pharmacist Examination Course) வகுப்புகள். சங்கரப்பிள்ளை கட்டடம், 2-வதுமாடி. விபரங்களுக்கு: பரணி பார்மஸி, யாழ்ப்பாணம். 3003.

### தேவை

மசகிடும் சேவையில் (சேர்விஸ் ஸ்ரேசனில் வேலை செய்து அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர்முகமாகச் சமுகமளிக்கவும். லிங்கோலுப்பிறிக்கேசன் சேர்விஸ், பலாலி வீதி, கோண்டாவில். 3200

தண்ணீர் வசதியுடன் கூடிய வீடொன்று யாழ்ப்பாணம் நகரில் தேவை. தொடர்பு கொள்க. விளம்பர இல. 3006, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3006

### தவறிவிட்டது

க. மகேந்திரா என்பவருடைய அறிமுக அட்டை உட்பட, சான்றிதழ்களும் (சேட்டிவிக்கற்ஸ்) யாழ்ப்பாணம் - அளவெட்டி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்துடன் அல்லது அவரின் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 3005


## சங்க நிர்வாகிகள்

வெள்ளவத்தை, திங்கள் கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இணைப்புச் செயலாளர்- திரு நெல்லை க. பேரன், பொதுச் செயலாளர்- திரு. அ யேசுராசா, நிதிச்செயலாளர்-திரு குப்பிழான். ஐ. சண்முகன், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் மாவை. நித்தியானந்தன், சீ பொ காந்தகுமார், தில்லைக்கூத்தன், அண்ணு இராசேந்திரம், ஸ்ரீதரசர்மா, செல்வராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

## அறிவித்தல்



சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளர் ஆறுப்பிள்ளை கந்தையா அருளம்பலம் 15-7-70ல் காலமாகிவிட்டார். அவரினால் குரும்பசிட்டி ஈஸ்வரி வாசத்தில் 14-4-1969ல் ஆரம்பிக்கப்பட்ட தொழில் தொடர்பாக உள்ள கொடுக்கல் வாங்கல் விபரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 1-8-1970க்கு முன்னர் ஆதாரத்துடன் அறிவிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

அ. குகதாசன்,
அ. சிவதாசன்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை,
18-7-70. 2375


ராஜா (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்! காந்தராவ்; ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி நடித்த
தினசரி 3 காட்சிகள்
**மாவீரன் ஜெயசீலன்**

ராணி (யாழ்ப்பாணம்) ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ் — ஜெயந்தி நடித்த
தினசரி 3 காட்சிகள்
**இரு கோடுகள்**


# பாஷையூர் கோஷ்டி நாளை திருமலை செல்கிறது

## இரு உதைபந்தாட்டங்களில் விளையாடும்

யாழ்ப்பாணம், புதன் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், நாளை திருக்கோணமலைக்குச் செல்கின்றது. திருக்கோணமலையில் இக்கழகம், இரண்டு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும்.

திருக்கோணமலையில் தற்போது முன்னணியில் நிற்கும் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்துடனும், ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகத்துடனும், எதிர்வரும் 24.ம்,25-ம் திகதிகளில் பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகம் போட்டியிட இருக்கின்றது.

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், தற்போது யாழ்ப்பாணத்திலேயே ஒரு சிறந்த உதைபந்தாட்டக் கோஷ்டியைத் தன்வசம் வைத்திருக்கின்றது. சென்ற வாரம் இக்கோஷ்டி யாழ்ப்பாணத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களைக்கொண்ட ஒரு தெரிவுக் கோஷ்டியுடன் மோதிய போட்டியில் 6-1 கோல்களால் வெற்றிபெற்றுத் தாம் ஒரு பலம் கொண்ட கோஷ்டியென்பதை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தியது. சென்ற வருடங்களில் இலங்கைப் பாடசாலைத் தெரிவுக் கோஷ்டியிலும், இலங்கை இளைஞர் தெரிவுக்கோஷ்டியிலும் அங்கம் வகித்து, இந்தியாவுக்கும், மணிலாவுக்கும் சென்று வந்த வீரர்களான பிரான்ஸிஸ், கொன்ஸலஸ், அன்ரனிப்பிள்ளை ஆகியோரும் பாஷையூர் கோஷ்டியில் அங்கம் வகிக்கின்றார்கள்.

பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், குறுகிய காலத்தில் துரித முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றதுஎன உதைபந்தாட்ட அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

திருக்கோணமலைக்கு செல்லும் பாஷையூர் கோஷ்டி வீரர் மணி காப்டனாகக் கடமையாற்றுகிறார். இக்கோஷ்டிக்கு திரு. ஏ. செபஸ்தியாம்பிள்ளை பொறுப்பாளராகச் செல்கின்றார். (தே. நி)

# கண்டியில் நடைபெறும் ஹாக்கி சுற்றுப்போட்டி

## 6 மாவட்டங்கள் விளையாடுகின்றன

யாழ்ப்பாணம், புதன் அகில இலங்கைப் பாடசாலைகளின் 11-வது வருடாந்த தேசியஹொக்கிச் சுற்றுப் போட்டி தற்போது கண்டியில் ஆரம்பமாகியுள்ளது. இச்சுற்றுப் போட்டி இம்மாதம் 24ம் திகதிவரை நடைபெறும்.

கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைத் தெரிவுக் கோஷ்டியும் கலந்துகொள்ளுகின்றது.

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கி சம்மேளனத்தின் ஆதரவில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டி இரு பிரிவுகளாக நடைபெறுகின்றது. மாத்தளை மாவட்டம், கண்டி மாவட்டம், யாழ் மாவட்டம், பதுளை மாவட்டம், கொழும்பு மாவட்டம் கேகாலை மாவட்டம் ஆகியன இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளுகின்றன.

மேற்பிரிவில் சாம்பியனாக வரும் மாவட்டக் கோஷ்டிக்கு, சேர் றிச்சட்அலுவிகார வெற்றிக்கிண்ணம் வழங்கப்படும்.

சென்ற வருடம் கொழும்பில் நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் .மாத்தளை மாவட்டக் கோஷ்டியே சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (தே. நி)

வல்வை. சுங்க இலாகா

# களஞ்சிய அறையிலிருந்து 2 வலைகள் களவு

வல்வெட்டித்துறை செவ்வாய்

வல்வெட்டித்துறை சுங்கப் பகுதியிடமிருந்து 2 வலைகள் திருட்டுப் போயிருப்பதாகப் பொலிஸில் அறிவிக்கப்பட்டுள்ளது. விலைஉயர்ந்த இவ்விரு வலைகளும் வல்வை சுங்க இலாகா களஞ்சிய அறையிலிருந்து நேற்றுமுன் தினம் இரவு களவு போயுள்ளது. களஞ்சியஅறைக்கூரை ஓட்டைப் பிரித்து உள் இறங்கி திருடர்கள் வலைகளை எடுத்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

## சிங்களத்தில் அலுவல்கள் ஆரம்பம்

கிரிமைத்தியான, செவ்வாய் நாத்தாண்டியா தொகுதியிலுள்ள மறவில மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் முதல் தடவையாகச் சிங்களத்தில் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஒரே பாடசாலையில்

# ஏழு ஆசிரியர்களும் ஓய்வு பெறுகின்றனர்

பருத்தித்துறை செவ் இப்பாடசாலைத் தலைமை கரவெட்டி மாணிக்கவாசக ஆசிரியர் இம்மாதம் ஓய்வு கர் விதாலயத்தில் கடமை பெற்றுவிட்டார். இதேயாற்றும் ஏழு ஆசிரியர் போல இப்பகுதியில் பல

## சேரன் இல்லம் முதலிடம்

அம்பன், திங்கள் நாகர்கோயில் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாகதம்பிரான்கோயில் முன்றலில் வித்தியாலய அதிபர் திரு. ம. கந்தையாவின் தலைமையில் நடைபெற்றது. சேரன் இல்லம் முதலிடத்தையும், பாண்டியன் இல்லம் இரண்டாமிடத்தையும் சோழன் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன. அலங்கார இல்லத்திற்கான வெற்றிக் கிண்ணத்தைப் பாண்டியன் இல்லம் பெற்றது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்துவும், போஷகராக அம்பன் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திரு. சு. குணரத்தினமும் கலந்து கொண்டனர். வெற்றியீட்டியோருக்கு வட்டாரக் கல்வியதிகாரி திரு. கே. நவரத்தினம் பரிசில்கள் வழங்கினார்.

## சாம்பியன் இல்லம்

கொழும்புத்துறை, செவ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப்போட்டியில் "பொன்னுச்சாமி இல்லம்" சம்பியனானது. கனகசபை இல்லம, கந்தவனம் இல்லம்முறையே 2-ம், 3ம் இடத்தைப்பெற்றன.

ஆண்கள் மேற்பிரிவில் எம். விஜயகுமாரு, மத்திய பிரிவில் வி, சிறிஸ்கந்தராஜாவும். கீழ்ப்பிரிவில் ரி சௌந்தரராஜாவும் பாலர் பிரிவில்என். பாபுநடேசனும் சம்பியனானோர்கள்.

பெண்கள் மேற்பிரிவில் எஸ். இராசமலரும் கீழ்ப் பிரிவில் கே. ஜீவரேகாவும் பாலர் பிரிவில் ரி. ஜெயமாலினியும் சம்பியனானோர்கள்.

பிரதம விருந்தினராக வடமாநில கல்வி அதிகாரி திரு. வெ. சங்கரலிங்கம் கலந்து கொண்டார். பரிசு பெற்றோருக்கு பாடசாலை முன்னைநாள் முகாமையாளர் திருமதி சோமசுந்தரம் பரிசில்களை வழங்கினார்.

## இளைஞன் தற்கொலை

புதுக்குடியிருப்பு, செவ் ஆனந்தபுரத்தைச்சேர்ந்த மாந்தி சுப்பிரமணியம்

நியமனங்களுக்கான

# போட்டிப் பரீட்சை முறை நீக்கப்படும்

கோட்டை, செவ். அரசாங்க சேவைகளுக்கு நியமனங்கள் வழங்கும் முறைகளில் அடிப்படையான மாற்றங்கள் விரைவில் கொண்டுவரப்படுமென பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

போட்டிப் பரீட்சைகள் மூலம் நியமனங்கள் வழங்கப்படுதலில் மாற்றம் கொண்டுவர அமைச்சர் பீலிக்ஸ் திட்டமிட்டுள்ளார் அமைச்சரின் திட்டத்தின் கீழ் நியமனங்களுக்கான அரசாங்கப் பரீட்சைகள் அல்லது போட்டிப் பரீட்சை ஆகியவை நீக்கப்படலாம்.

அரசாங்க சேவைகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் கல்வித் தராதரத்திற்கு அமையவே புள்ளிகள் வழங்கப்பட்டு அவர்களின் நியமனங்கள் புதிய திட்டத்தின்கீழ் கணிக்கப்படவிருக்கிறது.

பொது நிர்வாக, உள்நாட்டு விவகார, உள்ளூராட்சிமன்ற அமைச்சின் பிரமுகர் ஒருவர் அமைச்சரின் மேற்படி புதிய திட்டம் பொதுசேவைக் கமிஷனின் முன் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இதன்படி பொதுசேவைக்கமிஷன் விதிகளை வகுக்கும் என்றார்.

## இன்றைய பலன்

ஆடி மாதம் 6-ம் திகதி [22-7-70]

மேஷம்- மனப்போராட்டங்கள் நடைபெறும். உணர்ச்சிமயமான தினம். உடல்நலனும் பாதிக்கப்படலாம்.

ரிஷிபம்- விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு. சிறப்பான தினம்.

மிதுனம்- தாராளமான குணத்தின் மூலம் தனமும் செலவாகும். புண்ணிய யாத்திரையும் உண்டு.

கடகம்- திடீர் திருப்பம் உங்களை திகைக்கவைக்கலாம். அதிகம் பேச்சைக் குறைக்கவும்.

சிம்மம்- புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள் இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்திற்கு சிறந்த பயனை அளிக்கும்

கன்னி- எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு.

துலாம்- செய்தொழிலால் சிறப்புண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். உற்சாகமானதினம்.

விருட்சிகம்- முயற்சியால் முன்னேற்றம் கிடைக்கும். பந்துக்களுடன் தொடர்புகள் பெருகும்.

தனு- வெளியிடத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். வீட்டில் சுப கருமங்கள் நடைபெறும்.

மகரம்- பொருளாதாரத் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். புதிய

கட்டிடப்பொருட்கள்

## புதருக்குள் மறைத்து வைக்கப்பட்டன

கோட்டை. செவ்வாய் களனி டயர் தொழிற்சாலைக் கருகாமையில் 10 லட்சம் ரூபா பெறுமதியான இரும்புத் தகடுகள், குழாய்கள் போன்ற கட்டிடவேலைகளுக்குத் தேவையான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சில வருடங்களுக்கு முன்னர் சோவியத் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இப் பொருட்கள் மேற்படி தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள புதர்களில் மறைத்துவைக்கப்பட்டிருந்தன

டயர் கூட்டுஸ்தாபன ஊழியர்கள் தொழிற்சாலையின் சுற்றுப் புறங்களைத் துப்பரவு செய்தபோது மேற்படி பொருட்களைக் கண்டுபிடித்தனர். இப் பொருட்கள் டயர் தொழிற்சாலை நிர்மாணத்தின் பொருட்டு ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையெனவும். அவற்றை புதர்களுக்கிடையில் மறைத்து வைத்தவர்கள் யார் என்பதும் தெரியாது என டயர் கூட்டுஸ்தாபன அதிபர் திரு எல். டபிள்யு. பண்டிதரத்தின தெரிவித்துள்ளார்

## விவசாய மன்னருக்கு காணி வழங்க படமாட்டாது

கோட்டை, செவ்வாய் முன்னைய அரசாங்கத்தின்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் — ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த

## இரு கோடுகள்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன் (இருவேடங்களில்
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த

## உத்தம புத்திரன்

(புதிய கொப்பி)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம்
திரைகளில்
தினசரி பி.ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

## துணைவன்

கதை வசனம் பாலமுருகன் | சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 22—7—70

(காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 குரல்வகை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45சௌக்கியசேவை, 7-00 வாத்தியஇசை, 7-15 சித்திரம், 7-45 இவ்வார அதிதி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு.

வெஸ்லிசினிமா
வாணிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
A.V. M ராஜன்-ஜெயலலிதா
நடித்த
மேஜர் சந்திரகாந்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30,9-30மணி
போயா, பிரிபோயா 2-30
எம்.ஜி. ஆர்.-கே ஆர். விஜயா
நடித்த
தாழம்பூ

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p m
Poya-Prepoya 10-30 a.m
Terry Moore,
Ben Johnson
in
MIGHTY JOE YOUNG
(Color)

REGAL JAFFNA
Daily 4 Shows
Neil Connery,
Daniela Bianchi
in
OPERATION KID
BROTHER
(Adults only)

## ஓய்வு பெறுகின்றனர்

பருத்தித்துறை, செவ் கரவெட்டி மாணிக்கவாசகர் விதாலயத்தில் கடமையாற்றும் ஏழு ஆசிரியர்களும் இவ்வாண்டு இறுதியில் ஓய்வு பெறுகின்றனர். இப்பாடசாலைத் தலைமையாசிரியர் இம்மாதம் ஓய்வு பெற்றுவிட்டார். இதே போல இப்பகுதியில் பல ஆசிரியர்கள் இவ்வாண்டு ஓய்வு பெறுகின்றனர்.

## நெற்காணிச்சட்டம்விரைவில் திருத்தப்படலாம்

பூநகரி, செவ்வாய்

நெற்காணிச் சட்டத்தில் அரசாங்கம் விரைவில் திருத்தம் செய்யவிருக்கிறது. இது சம்பந்தமான சுற்று நிருபத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏழுகமத் தொழில் பெரும்பாக உத்தியோகஸ்தருக்கும் அரசாங்கம் அனுப்பிவைத்துள்ளது.

தத்தமது பகுதிப் பயிர்ச் செய்கைக் குழுக்களுடன் ஆலோசித்து நெற்காணிச் சட்டத்தில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்றும், எவையெவை சேர்க்கப்படவேண்டுமென்றும் மக்கள் ஆலோசனையை உடன் அனுப்பி வைக்குமாறும் கமத்தொழில் பெரும்பாக உத்தியோகஸ்தருக்கு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில் கேட்கப்பட்டுள்ளதாம்.

இச்சுற்று நிருபத்தைத் தொடர்ந்து கமத்தொழில் பெரும்பாக உத்தியோகஸ்தர் திரு. கே. மகேந்திரன் பூநகரிப் பகுதியிலுள்ள 21 பயிர்ச்செய்கைக் குழுக் காரியதரிசிகளுடன் ஆலோசனை நடத்தி அவர்கள் தெரிவித்த திருத்தயோசனைகளை ஆணையாளர் மூலம் அரசாங்க மேலிடத்துக்கு சமர்ப்பித்துள்ளார்

இன்னும் இருமாதங்களில் நெற்காணித் திருத்தச் சட்டம் ஆட்சிமன்றத்திற்குக் கொண்டுவரப்படவிருப்பதாக நம்பப்படுகிறது.

டிப்ளோமா பரீட்சை

## அதிக பெண்கள் தோற்றினர்

பருத்தித்துறை, செவ்.

கடந்தவாரம்கொழும்பில் நடைபெற்ற கல்வி டிப்ளோமாபரீட்சையில் சுமார் 150ஆசிரியர் கலந்துகொண்டதாகவும் இதில் பெரும்பான்மையினர் பெண்கள் என்றும் தெரியவருகிறது. கல்விப்பகுதி நடாத்திவந்தஇப் பரீட்சையை 62-ம்ஆண்டுக்குப்பின் இவ்வாண்டே, அமைச்சர் திரு. பதியுத்தீன் மகமூத்தின் உத்தரவுப்படி மீண்டும் இலங்கைப் பல்கலைக்கழகம் நடாத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது

## இம்மாத முடிவுக்குள் 400 தாதிகள்

கோட்டை, செவ்

ஒவ்வொரு மாவட்ட பெரிய ஆஸ்பத்திரிகளிலும் உள்ள தாதிகள் பற்றுக் குறையை நீக்க 401 தாதிகளை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு. பி. ஜி. ஆரியதாசா தமதமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் 3 வருடப் பயிற்சி பெற்றவர்களுக்கே மேற்படி நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இம்மாத முடிவிற்குள் இவர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

## பெ. ஆ. சங்க நிர்வாகிகள்

சங்கானை, செவ்வாய்

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில்நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நடப்பு வருடஉத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. பரம்தில்லைராசா, உபதலைவர்: திரு. தா. செல்லையா, செயலாளர்: திரு. ந. சிவசிதம்பரம், உதவிச் செயலாளர் திரு. த. ஜெகதீஸ்வரன், தனதிகாரி. திரு. தா. விஸ்வலிங்கம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள்:- திருவாளர்கள் ஹட்சன் கனகசபை, எஸ். நடேசன், மு: ஐயாத்துரை, சி. சுந்தரம், அ. முத்துத்தம்பி எஸ். நாகலிங்கம், எஸ். கந்தசாமி, இ. நடராசா, எஸ். தங்கரத்தினம், சி.சின்னப்பு, எஸ்: தட்சணாமூர்த்தி கே. பேரம்பலம்.

## பிரிவுபசாரம்

தாவடி,செவ்வாய்

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியை திருமதி ஆ. வேலுப்பிள்ளை இளைப்பாறியதை முன்னிட்டு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பிரிவுபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது.

## இளைஞன் தற்கொலை

புதுக்குடியிருப்பு, செவ்

ஆனந்தபுரத்தைச்சேர்ந்த மாந்தி சுப்பிரமணியம் (வயது 20) தமது தந்தை ஏசியது பொறுக்காமல் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

தந்தைக்கும் தனயனுக்கும் ஏற்பட்ட சிறு தகராறினால் ஏற்பட்ட தற்கொலை என தந்தையை விசாரித்து மரணவிசாரணை அதிகாரி தம்பையா தீர்ப்புக் கூறினார்.

தனு- வெளியிடத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். வீட்டில் சுப கருமங்கள் நடைபெறும்.

மகரம்- பொருளாதாரத் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும்

கும்பம்- மனக்கோட்டை கட்டுவீர்கள்: எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும்.

மீனம்- இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## விவசாய மன்னருக்கு காணி வழங்க படமாட்டாது

கோட்டை,செவ்வாய்

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் விவசாய மன்னர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்குவதாகக் கூறப்பட்ட காணி வழங்கப்பட மாட்டாது எனத் தெரிய வருகிறது இவ் விவசாய மன்னர்களுக்கென காணிப்பகுதியினால் ஒதுக்கப்பட்ட நிலங்கள் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.





## திறம்படச் சிவிறுவதற்கு உறுதியான புதியயந்திரம்

## ஹேஸ்ப்றே 225 பிபி

தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.

புதிய ஹேஸ்ப்றே 225 பிபீ சிவிறியிலுள்ள ஈட்டி முனையில் பொருத்தப்பட்டுள்ள, தட்டிவிட்டமாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை சிறந்த முறையில் பயன்படுகிறது. ஏனெனில் இது, பாய்ச்சப்படும் மருந்தின் அமுக்கத்தைக் குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவிற்குக் கட்டுப்படுத்த வசதியளிக்கின்றது. இது, குறிப்பாக, பயிர்களுக்குச் சேதம் ஏற்படுமோ என்ற பயமே இல்லாமல், களைக் கொல்லிகளைத் தெளிக்க உபயோகப்படுகிறது.

துருதடுப்பு பித்தளைத் தாங்கியிலானது. வெளிப்புறத்தில், சதுர அங்குலத்திற்கு 70 றாத்தல் அமுக்கம் தரக்கூடிய பிஸ்டன் உடையது. அத்துடன் இடதுகைப் பிரயோகத்திற்கென அடிப்புறத்தில் இயக்கு விசை ஒன்றும் பொருத்தப்பெற்றது.

ஹேஸ்ப்றே உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

VISION 76/70

HAYLEYS
தயாரிப்போர்:
ஹேலீஸ் லிமிட்
400, டீன்ஸ் றோட்,
கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னுபிரிக்காவுக்கு கடல் பாதுகாப்புக்காக மாத்திரமே பிரிட்டன் ஆயுதம் வழங்கும்

## ஹியூம் பிரபு அறிவிப்பு

லண்டன், ஜூலை 21

தென்னுபிரிக்காவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒரு சில ரக ஆயுதங்களைப் பிரிட்டன் விற்பதற்குத் தயாராயிருக்கின்றது என்று பிரிட்டிஷ் வெளி உறவு அமைச்சர் அலெக் டக்ளஸ் ஹியூம் பிரபு அறிவித்திருக்கிறார்.

தென்னுபிரிக்காவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒருசில ரக ஆயுதங்களை விற்பனை செய்வதற்குத் தயார். ஆனுல் இந்த ஆயுதங்களை நிறபேதக் கொள்கைகளை அமுல்நடத்துவதற்காகவோ அன்றி உள்நாட்டு அடக்குமுறைகளுக்காகவோ பயன்படுத்துவதாய் இருக்கலாகாது என்று ஹியூம் பிரபு காமன்ஸ் சபையில் தெரிவித்தார்?

தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்க விருப்பது சம்பந்தமாக காமன்ஸ் சபையில் நடைபெறும் விவாதங்களுக்குப் பதிலளித்து ஹியூம் பிரபு பேசினுர். பிரிட்டனிடமிருந்து தென்னுபிரிக்கா வாங்கும் ஆயுதங்களை கடல் பாதுகாப்புக்காக மாத்திரமே உபயோகிப்பதாய் இருக்கவேண்டும் என்று அவர் சொன்னுர்.

பிரிட்டிஷ் வெளிநாட்ட மைச்சர் காமன்ஸ்சபையில் தெரிவித்துள்ள இக்கருத்தை ஐ. நா. பாதுகாப்புச்சபையில் சில ஆசிய ஆபிரிக்க நாடுகள் வரவேற்றிருக்கின்றன.

தென்னுபிரிக்காவுக்கு ஆயும் விற்பனை செய்வதை முற்றுகத் தடை செய்யும் கட்டளையொன்றைப் பிறப்பிப்பதற்கான தீர்மானமொன்றைப் பாதுகாப்புச்சபை ஆலோசிக்கவிருக்கின்றது. இத்தீர்மானத்தை வரைந்துள்ள 17 ஆசிய-ஆபிரிக்க நாட்டுப் பிரதிநிதிகளும் இப்பொழுது ஹியூம் பிரபு தெரிவித்துள்ள கருத்துக்களைத் தொடர்ந்து தமது தீர்மானத்தை சற்று நிதானமான வார்த்தைகளால் எழுதுவ பற்றி ஆலோசித்துவருகிருர்கள்.

தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்பதாயின் கொமன்வெல்த் நாடுகளுடன் முதலில் கருத்துப் பரிமாறிக் கொண்டபின்பே நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்திருப்பதை சாம்பியாவும், பாகிஸ்தானும் வரவேற்றிருப்பதாகத் தெரிகின்றது.

### தென்னுபிரிக்காவில் யுறேனியம்

அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவைப்படும் மிக முக்கிய மூலப்பொருளான யுறேனியப் படுக்கைகள் தென்னுபிரிக்காவில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம். இத்தகவலை தென்னுபிரிக்க பிரதம மந்திரி திரு. வொஸ்டர் ஆட்சி மன்றத்தில் வெளியிட்டார்.

இந்த யுறேனியத்தின் மூலம் உற்பத்திசெய்யப்படும் அணு சக்தி அமைதிப் பணிகளுக்கே பயன்படுத்தப்படுமென்று திரு. வொஸ்டர் கூறினுர்.

## ரஷ்யாவில் குமாரி கமலா

மாஸ்கோ, ஜூலை. 21

நடிகை குமாரி கமலா இப்பொழுது ரஷ்யாவில் சுற்றுப்பயணம் செய்துவருகின்ருர். இவரின் நடன நிகழ்ச்சிகள் மாஸ்கோ நகரிலும். மற்றும் பல இடங்களிலும் நடைபெறுகின்றன. இவரது நடனத்தைப் பார்க்க ரஷ்யர்கள் போட்டி போட்டு வருகின்றனர். பலர் டிக்கட் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

'குமாரி கமலாவின் நடனம் இந்திய கலாச்சாரத்தை அப்படி கண் முன் கொண்டுவந்து நிறுத்தி விட்டது' என்று தாத்யானு பத்ரயேவா என்னும் ஒரு மாணவி பாராட்டிப்பேசினுர்.

## மீன் மனிதன் மரணம்

மண்டபம், ஜூலை 21

மண்டபத்திலுள்ள மத்தியகடல் மீன் ஆராய்ச்சிக்கழகத்தில் கடந்த 11 ஆண்டுகளாகக்கடல் கன்னியுடன் வாழ்ந்து வந்த 'ராஜா' என்னும் 'மீன்மனிதன்' கடந்த ஞாயிறன்று இறந்து விட்டது.

இந்த 'மீன் மனிதன்' (இடுப்புக்கு மேல ஆண் உருவம் - கீழே மீன்) இப்பகுதியில் ஓர் அதிசயமாகவேஇருந்து வந்தது பதினுெரு ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஜந்துக்கள் உயிர் வாழ்ந்து வந்தன.

விஞ்ஞானிகளும் இவற்றில் ஆர்வம் காட்டினர். இறந்த 'ராஜா' வின் நிறை 150 கிலோ கிரும். [illegible]ளம் 200 செ. மீ. இப்போது கடல்கன்னி மட்டும் தான் இந்தக்கழகத்தில் தனி[illegible]

## ரயில் பிரயாணிகளுக்கு அன்னதானம்

விஸ்வமடு, செவ்வாய்

புகையிரதப் பிரயாணிகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இசசம்பவம் வவனியா புகையிரத நிலயத்தில் நடந்துள்ளது. கதிர் மாமயாத்திரை முடித்துக் கொண்டு திரும்பும் யாழ்ப்பாணப் பக்தர் கூட்டத்திற்கு 'அரோஹரா' கோஷத்துடன் வவனியா புகையிரதநிலயத்தில் வைத்து இங்குள்ளவர்களால் நேற்று முன்தினம் அன்னதானம் வழங்கப்பட்டது. புகையிரத வண்டியை மறித்து அன்னதானம் வழங்கியது இதுவே முதல்தடவையென ஒருவர் தெரிவித்தார்.

## அதிபர்கள் இடமாற்றம்

பருத்தித்துறை. செவ்வாய்

மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி. பர்வதவர்த்தனி சிவசங்கரம் உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபராகவும், வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. வி. தங்கராசா நாகர்கோவில் மகாவித்தியாலத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கரணவாய் மகாவித்தியாலய அதிபர் திரு. சீ. தர்மலிங்கம் வதிரி திரு. இருதயக் கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் ஆகியோரின் இடமாற்றங்கள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

## புதுக்குடியிருப்பில் வரவேற்பு

புதுக்குடியிருப்பு. செவ்

வவனியா எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவுக்கு புதுக்குடியிருப்பு மக்களால் வரவேற்பளிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்வரவேற்பு முன்னுள் கிராமசபைத் தலைவர் திரு. ச. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசிய எம். பி. புதுக்குடியிருப்பு மக்களின் அத்தியாவசிய தேவைகளை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லிப் படிப்படியாக நிறைவேற்றித் தருவதாகச் சொன்னுர். முல்லைத்தீவுபட்டினசபைத் தலைவர் திரு. மாசூ. வைத்தியாம்பிள்ளை மற்றும் திருவாளர்கள் கா. தம்பாபிள்ளை, க திருச்செல்வராசா, ச. சண்முகம் ஆகியோரும் பேசினர்.

# தமிழை வளர்ப்பதன்றி ஆங்கிலத்தை அழிப்பதல்ல எமது நோக்கம்

## தமிழ்நாடு கல்வி கொள்கைபற்றி அமைச்சர் நெடுஞ்செழியன்

சென்னை, ஜூலை 21

''தமிழ்மொழியையே போதனுமொழியாக்குவதென்ற கொள்கையிலிருந்து அரசாங்கம் பின்வாங்காது. தமிழ்மொழியை அபிவிருத்தி செய்வதுதான் அரசாங்கத்தின் கொள்கையே தவிர ஆங்கில மொழியை அழிப்பதல்ல'' என்று சர்வதேசக் கல்வியாண்டு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில், தமிழ்நாடு கல்விமந்திரி திரு நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தமிழ், ஆங்கிலம் இரண்டுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தும், ஆங்கிலத்தை அழிக்கமுயல்வதாகச் சிலர் கூறுகிருர்கள், தமிழகப்பாடசாலைகளில் 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்கப்படுகிறது. வேறு சில ராஜ்யங்களில் பத்தாவது வகுப்பில்கூட ஆங்கிலம் போதிக்கப்படுவதில்லை.

அரசாங்க கல்லூரிகளில் தமிழ்மொழியையே போதனுமொழியாகக் கொண்ட உயர்தரப்படிப்புக்கு வசதிகள் செய்யப்படுகின்றன. இதனுல் ஏற்படும் விளைவுகளை அரசாங்கம் ஏற்கத்தயார். தனியார் கல்லூரிகளுக்கும், ஆங்கிலத்தின் மூலம் கல்விபோதிக்க உரிமை உண்டு.

### அமைதியின்மை

மாணவரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையை நீக்க ஒவ்வொரு கல்வி ஸ்தாபனத்திலும் மாணவர் கவுன்சில் நிறுவ அரசாங்கம் உத்தேசித்துள்ளது

'பாடசாலைகளில், கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ள நன்கொடைகள் என்ற பெயரில் கல்வி ஸ்தாபனங்கள், மாணவர்களிடமிருந்து அதிகமாகப் பணம் வசூலிக்கின்றன. இது சம்பந்தமாக சட்டப்படி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

மேற்காஸியாவில்

## ராணுவ சமபலம் இருக்க வேண்டுமாம்

நியுயோர்க், ஜூலை 21

மேற்காஸியாவில் சோவியத் நிபுணர்களும், ஆயுத உதவிகளும் தொடர்ந்து குவிக்கப்பட்டுக்கொண்டிருந்தால் அங்கு ராணுவ சமபலம் இல்லாமல் போய்விடும் என்று அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் கூறியிருக்கிருர். மேற்காஸியாவில் ராணுவ சமநிலை நிலவ வேண்டும் என்று அதிபர் நிக்ஸன் தெரிவித்துள்ளார்.

கம்போடியாவுக்கு மேற்கொண்டும் துருப்புகளை அனுப்பும் எண்ணம் அமெரிக்காவுக்குகிடையாது என்றும் அதிபர் நிக்ஸன் குறிப்பிட்டார்.

## பிரி. நிதி அமைச்சர் திடீர் மரணம்

லண்டன், ஜூலை, 21

பிரிட்டிஷ் நிதியமைச்சர் திரு இயான் மாக்லியாட் கடந்த இரவு திடீரெனக் காலமானுர்.

திரு. மாக்லியாட்டுக்கு வயது 56 மாரடைப்பின் [illegible]ரணமாக அவர் உயிர் [illegible]றந்தார்.

இதயத்தில் ஏற்பட்ட ஒரு கோளாறு காரணமாக கடந்த மாதம்அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்[illegible]ப்பட்டார். ஆஸ்பத்திரி[illegible]மாகி கடந்த ஞாயிற்றுக்கிழமை திரு. மாக்லியாட் வீடுதிரும்பினுர். நேற்றிரவு திடீரென அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு உயிர்துறந்தார்.

திரு. மாகலியாட் முந்திய கன்சர்வேடிவ் அரசாங்கங்களிலும் சுகாதாரம், தொழில் அமைச்சர் பதவிகளை வகித்திருக்கின்ருர். 1959ம் ஆண்டிலிருந்து 1961ம் ஆண்டுவரையில் காலிநாடுகளுக்கான

## ''கடத்தலைத் தடுக்க மேலும் விசைப் படகுகள் தேவை''

கோட்டை, செவ்வாய்

கரையோரப் பகுதிகளில் நடைபெறும் கள்ளக்கடத்தல்களையும், சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுக்கும் நடவடிக்கைக்கு 180 லட்சத்திற்கும் மேல் பெறுமதியான 12 விசைப் படகுகள் தேவையெனப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சை இலங்கைக் கடற்படை கேட்டுள்ளது.

கடலின் பெரும்பகுதியைக் கண்காணிக்க இப்படகுகளைச் சிங்கப்பூரிலிருந்து அல்லது பிரிட்டனிடமிருந்து வாங்கலாமெனத் தெரியவருகிறது.

கள்ளக்கடத்தல் காரணமாக இலங்கை கிட்டத்தட்ட 10 லட்சம் ருபாவை அந்நியச் செலாவணியாக நாளொன்றுக்கு இழப்பதாகச் சுங்கப்பகுதியினர் கூறினர்.

## உத்தரவு வழங்கப்பட்டது

அம்பன், செவ்வாய்

வடமராட்சி வடகிழக்குக் காரியாதிகாரி பிரிவிலுள்ள வரணி, குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளில் குடியேற்றத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய, காணி பண்படுத்தல் சட்டத்தின்படி கொடுக்கப்படும் உத்தரவுப் பத்திரம், பெரும் பகுதிக் காணி உத்தியோகத்தர் திரு. சைமனுல் அம்பன் கி. மு. சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

## பாராட்டுவிழா

சீனன்குடா, செவ்

காந்தீயத் தொண்டர் திரு. வே. சிவஞானத்திற்கு காஞ்சிபுரம் தொண்டை மண்டல மெய்கண்டாராதீன குருமகா சந்நிதானம் பண்ணிசைப்புலவர் பட்டம் வழங்கி அவரை ஆதீனப் புலவராக ஏற்றுக்கொண்டதைப் பாராட்டுமுகமாக இம்மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை மாலை திருகோணமலை இந்துக்கல்லூரியில் பாராட்டுவிழா நடைபெறவிருக்கிறது. டாக்டர் சி. சிவானந்தம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பாராட்டு

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம்

# வாக்குறுதியை இலங்கை முதலில் நிறைவேற்ற வேண்டும்

## முன்னுள் இந்திய எம்.பி.வெளியிடும்கருத்து

சென்னை, ஜூலை 20

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்திற்கமைய ஏழுபேருக்கு நால்வர் என்ற விகிதப்படி இலங்கை அரசாங்கம் இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்கினு[illegible] பிரதம மந்திரிதயங்கினுர் என்று கூறிய திரு. குன்ஸ்ரு நிழல்தரும் ரப்பர் மரங்களுக்குகீழ் வேலைசெய்யவிரும்பும் அளவுககு, எறிக்கும் வெய்யிலில் தேயிலைத்தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்கள் வேலைசெய்ய விரும்பாதது இன்னுெரு காரணம் என்ருர்.

அகதிகள்குடியமர்த்தலுக்கான தமிழ்நாடு அரசு எடுத்து வரும் முயற்சிகளை அவர் பாராட்டினுர்.

அறவாழி படைக்க[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சென்னை, ஜூலை 20
சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்திற்கமைய ஏழுபேருக்கு நால்வர் என்ற விகிதப்படி இலங்கை அரசாங்கம் இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்கினுலன்றி இனிமேலும் இலங்கையிலுள்ள இந்திய இனத்தவர்களுக்கு இந்திய பிரஜாவுரிமை கொடுப்பதை நிறுத்திவிடவேண்டும் என்று முன்னுள் இந்திய ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஸ்ரீ தயநாத் குன்ஸ்ரு கூறியிருக்கிறுர்.

உலக விவகாரங்கள் பற்றிய இந்திய கவுன்சிலின் ஆதரவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய திரு. குன்ஸ்ரு இந்தியா 70,000க்கும் மேற்பட்டவர்களுக்கு பிரஜாவுரிமை கொடுத்திருக்கையில் 40,000 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கவேண்டிய இலங்கை அரசு 5000 பேருக்கும்கூட பிரஜாவுரிமை வழங்காமலிருக்கின்றது என்று குறிப்பிட்டார். இலங்கை, பர்மா, ஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இந்திய வம்சாவழியினர் வெளியேற்றப் படுவதற்கும் இந்திய அரசின்வெளி நாட்டுக் கொள்கைகளுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை. இதுமுற்றிலும் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்னையென்றுர் திரு. குன்ஸ்ரு.

அந்த நாடுகள் அங்குள்ள இந்தியர்களுக்கு அநீதி விளைவிப்பதைத் தடுப்பதுகுறித்து இந்தியாவினுல் எதுவும் செய்யமுடியாது. அதேசமயம் அவர்களைத் திருப்பியெடுக்கும் பொறுப்பையும்தட்டிக்கழிக்க முடியாது வெளிநாடுகளிலிருந்து குடி பெயர்ந்து வரக்கூடிய சுமார் 20 லட்சம் பேருக்கும் வேலைவாய்ப்புக்கள் செய்துகொடுக்கும்வகையில் நாட்டைத் துரிதமாக கைத்தொழில்மயமாக்குவதே இதற்குள்ள ஒரே வழியென்று அவர் சொன்னுர்.

இலங்கையிலுள்ள இந்தியர் பிரச்னை பற்றியே அதிகமாகக் குறிப்பிட்ட திரு. குன்ஸ்ரு, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல 15 ஆண்டுகளுக்குள் குடிபெயர்தல்செயல்படுத்த முடியுமாவென்று சந்தேகம் தெரிவித்தார். 3லட்சம் இந்திய வம்சாவழியினருக்குப் பிரஜாவுரிமை வழங்குவதற்கும் 5லட்சத்து 25 ஆயிரம் பேரை அவர்களின் உடைமைகளுடன் இந்தியாவுக்கு திருப்பியனுப்புவதற்கும் 50 கோடி ரூபா இலங்கைக்கு செலவு பிடிக்குமென்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியரை வெளியேற்றுவதில் ஏற்படும் செலாவணி நஷ்டம் காரணமாக இதை துரிதமாகச் செயல்படுத்துவதற்குஇலங்கையின்பழைய பிரதம மந்திரிதயங்கினுர் என்று கூறிய திரு. குன்ஸ்ரு நிழல்தரும் ரப்பர் மரங்களுக்குகீழ் வேலைசெய்யவிரும்பும் அளவுககு, எறிக்கும் வெய்யிலில் தேயிலைத்தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்கள் வேலைசெய்ய விரும்பாதது இன்னெரு காரணம் என்றுர்.

அகதிகள்குடியமர்த்தலுக்கான தமிழ்நாடு அரசு எடுத்து வரும் முயற்சிகளை அவர் பாராட்டினுர்.

# இலங்கையிலிருந்து கராம்பு கடத்தல்?

## இந்திய அதிகாரிகள் நடவடிக்கை

நாகபட்டினம், ஜூலை 21
இலங்கையிலிருந்து ஒரு மோட்டார்படகில் இந்தியாவுக்குகராம்பு கடத்தப்பட்டதாம். ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள கராம்பு மூடைகளை கடத்தல்காரர்கள் மோட்டார்படகிலிருந்து கட்டுமரத்தில் இறக்கி கரையை நோக்கிக்கொண்டு வரும்பொழுது சுங்க இலாகா அதிகாரிகள் மோட்டார் படகின் மூலம் துரத்திஞர்கள் கட்டுமரத்தை நிறுத்தச் சொன்ஞர்கள். கடத்தல்காரர்கள் நிறுத்தவில்லை. எனவே அதிகாரிகள் கட்டுமரத்தை நோக்கி சுட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

உடனே கடத்தல்காரர்கள் கராம்பு மூடைகளை கடலில் தள்ளிவிட்டு கடலில் குதித்து நீந்திஞர்கள் என்றும் அவர்களுக்கு ஆதரவாக கரையில் இருந்த சிலரின் உதவியுடன் தப்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடலில் போடப்பட்ட மூடைகளில் 15 மூடை மீட்கப்பட்டன.

நாகபட்டினத்துக்கும், வேளாங்கண்ணிக்கும் இடையே இந்த சம்பவம் நடந்தது. கட்டுமரத்தில் மொத்தம் ஏழு பேர் இருந்ததாகத் தெரிகிறது.

இலங்கையிலிருந்து

# அமைதிப் படையினர் திரும்புவதில் யு எஸ். கவலை

கொழும்பு, ஜூலை 20
இலங்கைக்கு அமைதிப் படை சேவையை வழங்குவதற்கென 1962-ம் ஆண்டில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை முடிவடையச் செய்ய விரும்புவதாக இலங்கை அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள 90 நாள் அவகாச ஷரத்தின்கீழ் அமைதிப்படையின் சேவையை முடிவடையச் செய்யும் வேளையில் இலங்கை அரசாங்கம் அமைதிப்படையின் கடந்தகால சேவைகளுக்கு அமெரிக்க அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ளது அத்துடன் அமைதிப்படையில் பணியாற்றும் தொண்டர்களுக்கும், அவர்களின் முயற்சிகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளது.

அமைதிப்படையினர் முதன்முதலாக 1962-ம் ஆண்டில் இங்கு வந்தனர். இலங்கை மேலதிக தொண்டர் சேவையை நாடாததினுல் அவர்கள் இரண்டு வருடம் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்தனர். 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு மீண்டும் வந்த அமெரிக்க அமைதிப்படையினர் அன்று முதல் கிராம அபிவிருத்தித் திட்டங்களிலும், சுகாதாரத்துடன் தொடர்புடைய திட்டங்களிலும் பணியாற்றி வந்துள்ளனர்.

இலங்கையில் இப்பொழுது 20 அமைதிப் படை தொண்டர்கள் இருக்கின்றனர். இவர்கள் குறிப்பாக வலுக் குறைந்த பிள்ளைகளுக்கான நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இலங்கை முன்பு விண்ணப்பித்திருந்த பிரகாரம் கோடை காலத்தில் இங்கு வரவிருந்த திறமை வாய்ந்த இரண்டு புதிய தொண்டர்கள் குழு இதே தேவையுள்ள இதர நாடுகளுக்கு திருப்பப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் உடன்படிக்கையை முடிவடையச் செய்ய மேற்கொண்ட தீர்மானம் பற்றி அமெரிக்க அரசாங்கம் கவலை தெரிவிக்கும் அதே வேளையில் அமைதிப்படையினர் மேற்கொண்ட சீரிய பணிகளுக்கும் நாட்டிற்குநல்கிய சேவைகளுக்கும் இலங்கை அரசாங்கம் தெரிவித்த நன்றிக்கு அமெரிக்கா நன்றி தெரிவித்துள்ளது.

கிறும். ...ளம் 200 செ. மீ. இப்போது கடல்கன்னி மட்டும் தான் இந்தக்கழகத்தில் தனியே உள்ளது.

# அறவாழ்வு படைத்த சமுதாயம் உருவாகவேண்டும்

குமரபுரம், செவ்வாய்
''புராதன காலத்தில் கோவில்கள் கலாசேஷத்திரங்களாக விளங்கின. அங்கே பல பெரிய மேதைகள் புராணபடனங்கள் செய்து அறிவை வளர்த்தனர். நல்ல சமுதாயம் துலங்கியது. இப்போது கோயிலில் வணங்குபவர் குறைவு. ஆனுல் வேண்டாத இடங்களில் மக்கள்கூடி அலைகின்றனர். தேவார அறிவு குறைவு. ஆனுல் இப்ப படப்பாட்டுகள் தெரியாத பிள்ளைகள் குறைவு இந்தநிலையை யாம் மாற்றி அறவாழ்வு படைத்த சமுதாயத்தை உருவாக்கவேண்டும்''

இவ்வாறு குமரபுரம் முருகன் கோயியில் நடந்த விழாவில் கிளிநொச்சி தமிழாசிரிய சங்கத் தலைவர் திரு ஆர். ரி. சுப்பிரமணியம் தனது தலைமை உரையில் கூறினுர்.

திரு. வி. ஆனந்தசங்கரி உட்பட 3000க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

— —

# 'உடலுறுதியே உளவுறுதி'

சுன்னுகம், செவ்.
சிறுவர்களிடையே தூய சிந்தனைகளும், தூய பழக்க வழக்கங்களும் வளர்வதற்கு உடலுறுதிப் போட்டிகள் மிகவும் உதவுகின்றன. பரீட்சைகளில் சித்தியடைதலைக் குறிக்கோளாகக் கொள்வது போல இத்தகைய உடலுறுதிப்போட்டிகளிலும் சில சாதனைகளைப் புரிவதற்குச் சிறுவர்கள் முயற்சி செய்யவேண்டும்.''

இவ்வாறு ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றவிளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வலிவடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் கூறினுர். கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் போட்டிகள் நடந்தன.

மூன்று இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற இப் போட்டியில் நாவலர் இல்லம் சாம்பியன் கேடயத்தைப் பெற்றது. செந்திநாதர் இல்லம் இரண்டாவதாகவும் தாமோதரஇல்லம் மூன்ருவதாகவும் வந்தன. எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்த கயிறு இழுத்தல் போட்டியில் செந்திநாதர் இல்லம் முதலிடத்தைப்பெற்றது. கடந்த மூன்று வருடங்களாக இவ் இல்லம் இப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

டினசபைத் தலைவர் திரு. மா. சூ. வைத்தியாம்பிள்ளை மற்றும் திருவாளர்கள் கா. தம்பாபிள்ளை, க திருச்செல்வராசா, ச, சண்முகம் ஆகியோரும் பேசினர்.

— —

சங்கானை

# உபதால் நிலையத்தை தரமுயர்த்துக

சங்கானை, செவ்வாய்
சங்கானை உபதபாற் கந்தோரைத் தரம் உயர்த்த வேண்டும் என்று கோரும் மகஜரொன்றை சங்கானை மக்கள் தபால் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

பட்டின சபை அந்தஸ்துப் பெற்றுள்ள சங்கானையில் பல வர்த்தக ஸ்தாபனங்களும் பாடசாலைகளும் அரசாங்க காரியாலயங்களும் சந்தையும் அமைந்துள்ளதாயும் நீண்டகாலமாக இந்த உபதபாற் கந்தோர். தரம் உயர்த்தப்படவேண்டும் என பல கோரிக்கைகள் முன்னைய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தும் இதுகாலவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாதது வருந்தத்தக்கது என்றும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

......

# "சைவப் பண்பை பாதுகாப்போம்"

கந்தரோடை, செவ்வாய்
''கிராமங்களில் விளங்கி வந்த சைவப் பண்புகள் இன்று அருகிவருகிறது. மக்கள் சைவமதக் கோட்பாடுகளைப் பின்பற்றிச் சிறந்த வாழ்வை வாழச்செய்ய வேண்டும். அதற்காக இந்து இளைஞர் மன்றங்கள் உருவாகி சைவ மதத்தை உன்னதநிலைக்குக் கொண்டுவரவேண்டும்'' எனக் கந்தரோடையில் இந்து இளைஞர் மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்த உப தபாலதிபர் திரு. சி. கணேசவேல் கூறினுர்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

போஷகர்கள்: திரு. வி. தர்மலிங்கம், திரு. மா. நடராசா, தலைவர்: திரு. சி. கணேசவேல், செயலாளர்: திரு. ஆ. தனபாலசிங்கம், பொருளாளர்: திரு. அ. சர்வானந்தன்.

10 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

...மாரடைப்பினால் ...ரணமாக அவர் உயிர் துறந்தார்.

இதயத்தில் ஏற்பட்ட ஒரு கோளாறு காரணமாக கடந்த மாதம்அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆஸ்பத்திரியில் அவருக்கு அறுவை சிகிச்சையளிக்கப்பட்டது அறுவைச் சிகிச்சை வெற்றியளித்ததால் குண...

திரு. மாகலியாட் முந்திய கன்சர்வேடிவ் அரசாங்கங்களிலும் சுகாதாரம், தொழில் அமைச்சர் பதவிகளை வகித்திருக்கின்றுர். 1959ம் ஆண்டிலிருந்து 1961ம் ஆண்டுவரையில் காலிநாடுகளுக்கான செயலாளர் பதவியை அவர் திறமையுடன் வகித்து வந்தார்.

# சிறகுவலைத்திருட்டை தடுக்க சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்
கடற்ருெழில் மந்திரிக்கு சிறகுவலைச் சங்கம்பற்றிய நடவடிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், சிறகுவலைத் திருட்டைப் பொலிசாருடன் சேர்ந்து தடுக்கவும் யாழ். நாவாந்துறை சென்மேரிஸ் சங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற சிறகுவலைத்திருடடை அடுத்து கூடிய மேற்படி சிறகுவலைச் சங்கத்தில் 'சிறகுவலைக்காரர்கள் தங்களுடைய வலைகளை தாங்களே காவல் செய்யவேண்டுமென்றும் இதனுல் சிறகுவலைத் திருட்டைத் தடுகக முடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பலமாதங்களாக இச்சங்கம் செயலிழந்து கிடந்தமையால்தான் சிறகுவலைத் திருட்டு அதிகரித்துள்ளதென்றும் சங்க அங்கத்தவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. இதைத்தொடர்ந்து சிறகுவலைகளின் எண்ணிக்கையைப் பதிவுசெய்வதென்றும் திருட்டுப்போகும் வலைகள் பற்றி உடனடியாக பொலிசுக்கும் சங்கத்திற்கும் அறிவிக்க வேண்டும் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமானமுள்ள வலைகள் திருட்டுப்போய் உள்ளனென்றும் சங்கத்தின் அக்கறையின்மையே காரணமென்றும் எடுத்துக்காட்டப்பட்டது.

புதிய வருடத்திற்குரிய அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: து. சந்தியாகு, உபதலைவர்: திரு. அ. செல்வரத்தினம், செயலாளர்: சபாஸ்கல் மரியாம்பிள்ளை, உபசெயலாளர்: யோ. பிரான்சிஸ், தனுதிகாரி: சி. ஆரோக்கியநாதன்.

# இவர்கள் நிரந்தரமாக்கப்படுவா

கோட்டை, செவ்வாய்
கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திலுள்ள தற்காலிக ஊழியர்கள்விரைவில் நிரந்தரமாக்குவதற்கு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத் தலைவர் திரு. ஆர். ஒபயசேகரா முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

வெலிசறையிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவுக கருவாட்டுப்பகுதியில் பல ஆண்டுகளாக 1000ஊழியர்கள் தற்காலிகமாகவே வேலை செய்து வருவதாக அறியப்படுகிறது.

ஸ்தாபனத்தின் எல்லாப் பிரிவிலுமுள்ள தற்காலிக ஊழியர்களினதும் பட்டியலைத் தலைவர் கேட்டுள்ளார்.

— —

# இராணுவம் கவனிக்கும்?

விஸ்வமடு, செவ்வாய்
விஸ்வமடு விவசாயப் படையைச் சேர்ந்த சில வீரர்கள் விஸ்வமடுப்பகுதியில் உள்ள சில காட்டுக் காணிகளைத் தமது சொந்தச் செலவில் கடந்த ஒரு வாரகாலமாக வெட்டிவந்ததைத் தொடர்ந்து இப்பகுதிப் பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்ட வீரர்களை அரசாங்கத்தின் உத்தரவில்லாமல் காடுகளை வெட்டவேண்டாமென்று கேட்டுக்கொண்டதாகவும் ஆனுல் இதற்கு வீரர்கள் மறுக்கவே இவ் விஷயத்தை இராணுவத்திடம் பாரம்கொடுத்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

— —

# ஓய்வு பெறுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்
யாழ். கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த கல்வி ஆலோசகர் திரு. எஸ். விசுவலிங்கத்தை அக்டோபர் முதல் திகதியுடன் ஓய்வில் செல்லுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் இவருக்கு நுவரேலியாவுக்கு இடமாற்றம் கிடைத்து பின்னர் மாற்றம் ரத்து செய்யப்பட்டது.

...மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை மாலை திருகோணமலை இந்துக்கல்லூரியில் பாராட்டுவிழா நடைபெறவிருக்கிறது. டாக்டர் சி. சிவானந்தம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பாராட்டு மலர் ஒன்றை புலவர் வை. சோமாஸ்கந்தர் வெளியிடுவார், ஆத்மஜோதி நா முத்தையா, உதவி அரசாங்க அதிபர் திரு செ சிவஞானம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

— —

அகில இலங்கை

# கவிதைப் போட்டியில் பரிசு பெற்றேர்

அம்பன், செவ்
சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தையொட்டி வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினுல் அகில இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்றேர் விபரம்:

1-ம் பரிசு: திரு. சு. மகாலிங்கசிவம் (ஸ்கந்தவரோதயாக்கல்லூரி), 2-ம் பரிசு: திரு. மே. ஐயாத்துரை (அரியாலை), திரு. அப்பச்சி மகாலிங்கமும் (நவாலி தெற்கு) செல்வி ஜே. கந்தசாமியும் (புங்குடுதீவு) 3-ம் பரிசைப் பெற்றனர்.

— —

# இலங்கையர் மயமாகும்

கோட்டை, செவ்
உணவு இறக்குமதியை இலங்கையர் மயமாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உணவு இறக்குமதியில் ஈடுபட்டுள்ள இலங்கையரல்லாதவர்களும் ரி. ஆர். பி யுள்ளவர்களதும் இறக்குமதி லைசென்ஸ்களில் 33 சதவிகிதம் வெட்டப்பட்டுள்ளது

பேரீச்சம்பழ இறக்குமதியைக் கையாளுவதற்கே தற்போது இலங்கையரல்லாதவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த இறக்குமதியும் படிப்படியாக இலங்கையரிடம் ஒப்படைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# குளவி கொட்டி வயோதிபர் மரணம்

பருத்தித்துறை, செவ்வாய்
கரவெட்டியைச் சேர்ந்த வீரன் கணபதி என்னும் 70 வயது வயோதிபர் குளவி கொட்டியதால் மரணமானுர். பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்று நண்பகல் மரணமானுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஒரு நோக்கமுமில்லாமல் வெறுமனே இலக்கியத்தைப் படிப்பதைவிட. நல்ல விவேகத்தோடு கைத்தொழில் பயிற்சி பெறுவது அறிவை விசாலப்படுத்த எவ்வளவோ உதவியாயிருக்கும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 6-ந் திகதி (22 7-70)

# ஆயுத விற்பனை

தென்னுபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்பனைசெய்வதற்கு இருந்துவரும் தடையை ஓரளவு நீக்கி சிலரக ஆயுதங்களை விற்பனை செய்வது பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஹியூம்பிரபு நேற்றுமுன்தினம் அறிவித்தார். இந்த அறிவித்தல் ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. தென்னுபிரிக்காவுக்கு மீண்டும் பிரிட்டன் ஆயுதங்கள் விற்பனை செய்யவிருப்பதான வதந்தி சில வாரங்களாகவே அடிபட்டு வந்திருக்கிறது தென்னுபிரிக்கா சம்பந்தமாக பிரிட்டனின் புதிய 'கன்ஸர்வேடிவ்' அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று சிலதினங்களுக்கு முன் பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹரோல்ட் வில்சன் கேட்டபோது "அடுத்த வாரம் இதுபற்றித் தெளிவுபடுத்தி ஓர் அறிக்கை விடுவதாகப் பிரதமர் திரு. எட்வர்ட் ஹீத் பதிலளித்திருந்தார். தென்னுபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதுபற்றி ஆட்சிமன்றத்திலும் பிரபுக்கள்சபையிலும் சரமாரியான கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன. இப்போது இப்பிரச்னை உலக அரங்கில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக புயலைக் கிளப்பியிருக்கிறது. ஐ. நா. பாதுகாப்புச்சபையில் சில நாடுகள் கொண்டுவந்துள்ள பிரேரணை மீது விவாதமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தென்னுபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையை பிரிட்டனும் கண்டித்துவந்திருக்கிறது. காமன்வெல்த் நாடுகள் நிறவெறிக்கொள்கைக்கு எதிராகக் காட்டிய எதிர்ப்புக்காரணமாக காமன்வெல்த் கூட்டில் இருந்தே தென்னுபிரிக்கா

நடக்கவேண்டிய பொறுப்பும் கடமையுமுள்ள பிரிட்டனைப் போன்ற வல்லரசுகளே அவற்றை மீறுவதானல் இதர நாடுகளின் நிலை என்ன; ஐ. நா. வின் எதிர்காலம்தான் என்னவாகும்?

தென்னுபிரிக்காவின் உள்நாட்டுத்தேவைக்கு உபயோகப்படாத வெளிநாட்டுத் தேவைகளுக்குப் பயன்படக்கூடிய சிலரக ஆயுதங்களைத்தான் தென்னுபிரிக்காவுக்கு விற்பனை செய்ய பிரிட்டன் ஆலோசனை செய்து வருகிறதாம் ஆயுதங்கள் விற்பனை செய்வதென்று தீர்மானிக்கப்பட்டு விட்டால் எந்த ரக ஆயுதங்கள் அனுப்பப்படும்; எந்தெந்த இடத்தில், யார்யாருக்கெதிராக அவை உபயோகப்படுத்தப்படும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. அவை பற்றிக் கண்காணிப்புச்செய்ய முடியும் என்று நம்புவதற்குமில்லை. இது கடந்தகாலங்களில் பல இடங்களிலும் அனுபவரீதியாக அறிந்த உண்மை.

பிரிட்டிஷ் மகாராணிக்கெதிராகவே 'புரட்சி' செய்து ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்து ஆபிரிக்கச் சுதேசி மக்களுக்கெதிராகக் கொடுமைகள் பல செய்துவரும் அயன் சிமித்தும் தென்ரொடீஷிய அரசாங்கமும் துணிச்சலுடன் செயல்படுவதற்கு தென்னுபிரிக்காவின் உதவியும் ஆதரவும்தான் என்பதை பிரிட்டன் நன்கறியும் தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதங்கள் விற்பனைசெய்தால் அந்த ஆயுதங்கள் தென்ரொடீஷியாவுக்குப் போய்ச் சேரமாட்டாதென்பது என்ன நம்பிக்கை? பிரிட்டிஷ் மகாராணிக்கெதிராக நடந்துகொண்ட தென்ரொடீஷியாவுக்கு மறைமுகமாக உதவிசெய்ய பிரிட்டிஷ் அரசாங்கமே விரும்புகிறதா?

நிறத்திமிர் பிடித்த

## அல்லைப்பிட்டி செய்திகள்

### பிரயாணிகள் கஷ்டம்

அல்லைப்பிட்டி, செவ்

யாழ்ப்பாணத்திலிருந்து அல்லைப்பிட்டிக்குச் சேவையிலீடுபடும் இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்வண்டி தினமும் இரண்டு வேளை மட்டும் சேவையிலீடுபடுவதனல் பிரயாணிகள் முன்பு போல் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். இச்சேவை நிறுத்தப்படும்போது இரண்டு மைல்தூரம் நடந்து சென்றே யாழ்ப்பாணம் செல்லும் பஸ்வண்டியைப் பிடிக்கநேரிடுகிறது.

0 0 0

### புதிய தேர்

வேலணை பெருங்குளம் முத்துமாரிஅம்மன் ஆலயத்திற்கு பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் புதிய சித்திரத் தேரொன்று செய்யப்பட்டு வருகின்றன தற்போது இதன் அரைவாசி வேலைகள் பூர்த்தியாகிக் கொண்டு வருகின்றது. முற்றிலும் இலங்கையைச் சேர்ந்த சிற்ப ஆசாரிமாரை கொண்டே இத்தேர் செய்யப்பட்டு வருகிறது.

0 0 0

### சூதாட்டக்காரர்

வேலணைக் கிராமசபையின் பொதுசன நூல்நிலையத்தில் பத்திரிகை படிக்கப் போகும் மக்களுக்குச் சூதாட்டக்காரர்களால் தொல்லை ஏற்பட்டுவருகிறதாம். படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களே பெரும்பாலும் இத்தொல்லையைக் கொடுத்துவருகின்றார்களாம். வேலணை வங்களாவடி பஸ்நிலையச் சந்தியிலும் சூதாட்டக்காரர்கள் நாளுக்குநாள் அதிகரித்துவருவதினல் அவ்விடத்திலிருந்து பிரயாணஞ்செய்யப் பெண்கள் அஞ்சப்படுவதாகத் தெரிகிறது.

0 0 0

### உற்சவம்

வேலணை தெற்கு சிவசுப்பிரமணியசுவாமி கோவில் கதிர்காம உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. அன்று தீக்குளிப்புவைபவமும், மறுநாள் சுவாமி, வேலணை தெற்குத் துறைமுகக் கடற்கரையில் தீர்த்தமாடும் வைபவமும் நடைபெற்றது இவ்வுற்சவத்தில் வில்லிசைக் கச்சேரியும் இடம்பெற்றது

0 0 0

### நாடகவிழா

# நீர்வளமும் நிலவளமுமுள்ள கிராஞ்சி நிலம்

## யாழ். மக்களின் வரப்பிரசாதம்

சோ. க. தம்பிப்பிள்ளை
(தலைவர், கிராஞ்சி கி. மு. சங்கம்)

பூநகரி-மன்னர் நெடுஞ்சாலையில் 16வது கல்லில் வலது பக்கமாகத் திரும்பி மூன்றுகல் தொலை போனல் கிராஞ்சி என்னும் கிராமத்தை அடையலாம். அக்கிராமம் யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள பழம் பெருங் கிராமங்களில் ஒன்றாகும். இதன் நீர்வளத்தையும் நிலவளத்தையும் பற்றி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள லட்சக்கணக்கான மக்களில் ஒரு சிலரே அறிந்துள்ளனர். இங்கு யானைகள் கன்று ஈன்று இனத்தைப் பெருக்குகின்றன வென்றால் இக்கிராமத்தின் செழிப்புக்கும் புகழுக்கும் வேறுவிளக்கம் வேண்டுமா? இங்கு எந்த இடத்தை வெட்டினலும் ஏதாவது தொல்பொருள் கிடைக்கும். இவையாவும் அன்று மக்கள் இப்பகுதியில் செல்வச் சிறப்புடன் நாகரீகமாக வாழ்ந்ததற்குச்சான்றுபகர்கின்றன.

இப்பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் தென்னைச் செய்கைக்கு மிகவும் சிறந்ததெனக் கண்ட முன்னள் யாழ் மாவட்ட அதிபர் திரு ம. ஸ்ரீகாந்தா தென்னை பயிரிடுவதற்காக குடியேற்றத் திட்டத்தை ஆரம்பித்து சாதாரண விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வீதம் 500 ஏக்கர் காணியையும், மத்தியவகுப்புத் திட்டத்தின் கீழ் 10,20,30 ஏக்கர் 1500 ஏக்கர் காணியையும் 1955 இல் விநியோகித்தார் இத் திட்டத்தின் மூலம் அவர் கண்ட பொருளாதார சுபிட்சம் கானல் நீராகிவிட்டது. மனிதனின் உள்ளத்தில் ஈரமற்றுப்போனதே இதற்குக் காரணம் பணம் படைத்தவர்கள் போட்டி போட்டுக் கொண்டு காணி எடுத்தபோதிலும் அபிவிருத்தி செய்யத் தவறி விட்டனர். ஒருசிலர் அபிவிருத்தி செய்தும் மற்றவர்கள் காட்டை அழித்து தென்னை பயிரிடாமையால் இடையில் கைவிட்டு நட்ட மடைய நேரிட்டது. ஆனல் ... றதின் பயனக தென்னந் கோப்புகளை ... உருவாக்கிப்

தென்றால் மண்ணின் செழிப்பைப்பற்றி வேறு விபரம் கூற வேண்டியதில்லைகாணி கடற்கரை ஓரமாக அமைந்திருப்பது தென்னைக்கு மிகவும் வாப்பாக உள்ளது. இங்கு எப்பகுதியில் அகழ்ந்தாலும் 10 அடி ஆழத்தில் நன்னீர் கிடைக்கிறது இதுவும் தென்னைச் செய்கைக்கும் ஏனைய பயிர்ச் செய்கைக்கும் குடியிருப்பதற்கும் பெரும்வாய்பாக அமைந்துள்ளது. இக்கிராமத்தில் நன்கு உழைக்கக் கூடிய விவசாயப் பெருமக்கள் இருப்பதால் வேலைக்கு ஆட்களை அமர்த்துவதும் மிக வசதியாகும். வலைப்பாடு, வேரவில், பொன்னுவெளி ஆகிய கிராமங்களும் கிராஞ்சிக்கு அயலில் உள்ள பழம் பெரும் கிராமங்களே.

கிராஞ்சியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பாடசாலை, தபாற்கந்தோர் கிராம முன்னேற்றச் சங்கம் பயிர்ச்செய்கைக் குழு ஆகியவை உண்டு. மருந்துச்சாலை மிக விரைவில் திறப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இப்போது ஒன்றரைக் கட்டைக்கு அப்பால் வேரவில் கிராமத்தில் உள்ள பிரசவ விடுதி, மருந்துச்சாலை ஆகியவை இப்பகுதி மக்களுக்குச் சேவை புரிகின்றன.

பூநகரி-மன்னர் பஸ்மூலம் பல்லவராயன் கட்டை அடைந்து மூன்று மைல் நடக்கவேண்டி இருப்பதால் பிரயாணக் கஷ்டமுண்டு இவ்வாண்டில் பஸ் ஓடுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நாளைக்கு பூநகரி-மன்னர் நெடுஞ்சாலையில் எட்டுச் சேவையுண்டு ஒருவர் காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டால் ஒன்பது மணியளவில் கிராஞ்சியை அடைந்து அங்குள்ள வேலையைக் கவனித்துக்கொண்டு மாலையில் யாழ்ப்பாணம் திரும்பிவிடலாம். ஐந்து ரூபா செலவாகும்

... காணியைப் பெற்று ... அபிவிருத்தியில் ஈடுபடுபவர்கள் பின்வரும் ... மைகளைப் பெறக்கூடியதாக ... இருக்கு

## வெடிவிபத்து 3 பேர் கைது

யாழ்ப்பாணம், செவ்வாய்

உரும்பராயில் நடந்த வெடிவிபத்து சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்துவிசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது விஷமத்தனமான செயலென்றும், இப்படியான செயல்களில் ஈடுபடுபவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

— —

## அப்புத்தளையில் ஆடிவேல் விழா

அப்புத்தளை, செவ்வாய்

அப்புத்தளை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவிலில் கதிர்காமக் கந்தனது ஆடிவேல்விழா விமரிசையாக நடைபெற்றது இவ் விழாவின் 4ம் நாள் நிகழ்ச்சியில் அப்புத்தளை தேவாஸ் கலைக் கழகம் பங்கு கொண்டு விழாவினைச் சிறப்பித்தது தேவாஸ் கலைக்கழக உப அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கம் விழாவிற்குத் தலைமை தாங்கினர்.

— —

## மாவையிலிருந்து.

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

சாரை இங்கிருந்து அகற்றிவிடுங்களேன்'' என்று திரு சுந்தரலிங்கம் சிரித்துக் கொண்டே என்னைக் கேட்டார். நானும் சிரித்துக் கொண்டே ''ஹரிஜனர்களை உள்ளேபோக நீங்கள் அனுமதியளித்தால் பிரதமருடன் பேசி பொலிசாரை இங்கிருந்து அகற்றிவிடச் செய்கிறேன்'' என்று பதிலளித்தேன். இதுதான் பொலிசார்பற்றிய நாங்கள் பேசிக்கொண்ட விஷயம்'' என்று உதவி அமைச்சர் சோமவீர சந்திரசிறி மேலும் கூறினர்.

நேற்று மாவை ஆதீன

ஆசிரியருக்கு கடிதங்கள்

## உதவி அமைச்சரின் நல்லயோசனை

தெற்கிலிருந்து வந்த உதவிக்கலாச்சார அமைச்சர் அவர்கள், நம் நமது ஆங்கில மோகத்தினைவிட்டுச் சொந்த மொழியைப்பேண வேண்டுமென்று வலியுறுத்தியதாகச் செய்திவெளியாகியுள்ளது. நம் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு மிக அவசரமான, அவசியமான ஆலோசனை அதுவாகும். சிங்கள அரசாங்கம் தமிழ்மொழியுரிமையைப் பறித்துவிட்டதென்று அங்கலாய்க்கும் அரசியல்வாதிகள்தொடங்கி ஆசிரியர்கள்வரை வாய்ப்பேச்சினல் தமிழுக்குத் தொண்டு செய்கிறார்கள்; அவ்வளவுதான். ஆனல் ஆட்சிமன்றம் தொடங்கி ஆரம்பபாடசாலைவரை இன்றும் தமிழரிடையே அரசோச்சுவது ஆங்கிலமொழியேயாகும்.

சிங்களச் சகோதரர்களிடையே தாய்மொழிப் பற்றும் அதுபற்றிய அவசியமான பெருமையும் உறுதியாக இடம்பெற்றுவிட்டது ஆங்கிலத்தில் அழகாகப் பேசும் ஆற்றல் படைத்த டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திருவாளர்கள் பீட்டர் கெனமன், பேர்னுர்ட் சொய்சா போன்றோரெல்லாம் இப்போது சிங்களமொழிமூலமே ஆட்சிமன்றத்தில் உரையாற்றுகின்றனர். கொழும்பு ரோயல் கல்லூரிமுதல் பிற கல்லூரிகளிலெல்லாம் அவர்கள் மொழி உரிய இடத்தைப் பெற்றுவிட்டது ஆனல் நம்பகுதியிலோ பிரதேசக் கல்வி அலுவலகம் தொடங்கி பெரிய கல்லூரிகளிலெல்லாம் ஆங்கிலமொழியின் செல்வாக்கும் ஆதிக்கமும் இன்றும் நீங்கிவிடவில்லை நம் பாடசாலைகளில் தமிழ்மொழிமூலமே கல்விகற்பிக்கப்படுகிறது. ஆனல் அவற்றின் நிர்வாகத்திலும் வைபவங்களிலும் ஆங்கிலத்தின் ஆதிக்கம் அசைவற்றிருக்கிறது செந்தமிழ்ப்பண்டிதர்கள் கூட தமக்கு ஆங்கிலம் தெரியுமென்று காட்டிக்கொள்ள அவசரப்படும் தாழ்மையுணர்வோடு தமிழ்க்கல்வியுலகம் தடுமாறிச் சீரழிகிறது. அதனல் இத்தகைய ஆசிரியர்களிடம் கல்வி பெறும் நம் எதிர்கால மக்களாகிய இன்றைய மாணவர்களின் இளம் நெஞ்சங்களில்

## ...

தேன்.

இப்பாதையில் என்றும் நிரந்தரமாக ஓடுவது ஒரேயொரு வண்டியேயாகும். சாதாரண-சந்தை நாட்களில் இவ்வண்டியின் ஒழுங்கானசேவையைக்கண்ட பிரயாணிகள் இவ்வண்டியையே எதிர்பார்த்து நிற்பர். வேம்பிராய், மந்துவில், தாவளை, இயற்றாலை, வரணி மேலும் அப்பால் பருத்தித்துறை வரையுள்ள இடங்களுக்குச் செல்லும் மக்களுக்கு இப்பாதையில் இவ்வண்டியை விட வேறு எவ்வித வாகன வசதியும் கிடையாது.

சாவகச்சேரி சந்தை நாட்களில் பிரயாணிகளின் தொகை மிக அதிகமாகும். இந்நாட்களில் முன்சொல்லப்பட்ட இடங்களுக்குச் செல்லும் ஏழை மக்கள் மூட்டை முடிச்சுக்களுடன், உச்சி கொதிக்க, உள்ளங்கால் வேக. உச்சவெய்யிலில் நின்று உலைய, நுணுவில் 190-வது மைல், நுணுவில் சந்தி முதலிய குறுகிய தூர இடங்களுக்கு பிரயாணிகளை ஏற்றவில்லையென மக்கள் மனமாற்றமடைதல் நலந்தானு?

இதேநிலை சாவகச்சேரி-கைதடி கோப்பாய் ஊடாக-மானிப்பாய்க்குச் செல்லும் பஸ்வண்டிக் (பாதை இல. 811) காப்பாளருக்கும் ஏற்படக்கூடும். அப்படியானல் கைதடி ஆயம், கோப்பாய் உரும்பராய் மருதனுமடம் உடுவில் மானிப்பாய் போன்றஇடங்களுக்குச்செல்லும் பிரயாணிகள்வெளியே நின்று விரக்தியடைய நுணுவில் சந்திவரைசெல்லும்பிரயாணிகள் இலகுவாக ஏறி இறங்கி விட்டால், பின்னர் வண்டிவெறுமனேதான்செல்லும். இதனல்தூரஇடப் பிரயாணிகள் துன்பமடைகின்றனர். வண்டியின் வருமானம் குறைகிறது. இது நலந்தானு?

இச்சந்தர்ப்பங்களை இ. போ. ச. அதிகாரிகளும் உய்த்துணர்ந்து, வண்டிக்காப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட விதிமுறைகள் வேறு இருந்தாலும், சமயோசித நடைமுறைகளைப்பற்றி விளங்கக்கூறி அவர்களின் மனதிற்குத் தென்பூட்ட வேண்டும். தொழிலாளர்களுடன் பொதுமக்கள் அபிப்பிராய பேதமடைந்தால் அவர்களின் கண்ணியமானகடமை சேவை என்பவற்றை நாம் இழக்கவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டனும் கண்டித்துவந்திருக்கிறது. காமன்வெல்த் நாடுகள் நிறவெறிக்கொள்கைக்கு எதிராகக் காட்டிய எதிர்ப்புக்காரணமாக காமன்வெல்த் கூட்டில் இருந்தே தென்னாபிரிக்கா வெளியேற நேர்ந்தது. தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்கள் வழங்கவோ, விற்கவோ கூடாதென்று ஐ.நா. தீர்மானமும் நிறைவேற்றியிருக்கிறது. இத் தீர்மானத்தைத் தொடர்ந்துதான் ஆயுதங்கள் விற்பதை பிரிட்டன் தடைசெய்தது இப்பொழுது தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஆயுதங்கள் விற்பதற்கு சில ரக ஆயுதங்களானலென்ன, சகல ரக ஆயுதங்களானலென்ன — பிரிட்டன் முன்வந்தால் அது ஐ நா. தடைநடவடிக்கையையும் ஐ. நா. தீர்மானத்தையும் மீறுவதாகும். ஐ நா.வின் தீர்மானத்தை மதித்து

...டிஷ் மகாராணிக்கெதிராக நடந்துகொண்ட தென்ரொடீஷியாவுக்கு மறைமுகமாக உதவிசெய்ய பிரிட்டிஷ் அரசாங்கமே விரும்புகிறதா?

நிறத்திமிர் பிடித்த தென்னாபிரிக்க அரசாங்கத்துக்கு பிரிட்டன் மீண்டும் ஆயுதங்கள் விற்பனைசெய்தால் காமன்வெல்த்தில் இருந்து விலகிவிடப்போவதாக தான்ஸானிய அதிபர் அறிவித்திருக்கிறார். தான்ஸானியா மட்டுமல்ல இதர பல ஆபிரிக்க ஆசிய நாடுகளும் காமன்வெல்த்தில் இருந்து வெளியேறலாம்.

காமன்வெல்த் உறவு சீர்குலையாமலும் ஐ. நா. பலஹீனமடையாமலும் பாதுகாக்கப்பட வேண்டுமென பிரிட்டன் விரும்பினால் தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஆயுதங்கள் வழங்கும் யோசனையைக் கைவிடுவதே விவேகம்.

## "சிறிமாவை ஆதரிக்கும் அளவுக்கு தமிழர்க்கு நன்மை உண்டு"

— திரு. சோமவீர சந்திரசிறி

உடும்பராய், செவ்வாய் "நமது நாடு பல துறைகளிலும் முன்னேறவேண்டும். முன்னேற்றமான பாதையை வகுக்கத்தக்க திறமை வாய்ந்தவரே நமது பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும் அவரது அரசாங்கத்தையும் நீங்கள் எவ்வளவுக்கு ஆதரிக்கிறீர்களோ அவ்வளவுக்கு நமது நாடு துரிதமாக முன்னேற்றமடையவும் முடியும். இந்நாட்டு மக்கள் சகோதரர்களாகவும் சந்தோஷமுள்ளவர்களாகவும் வாழவேண்டும்.'

உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் கலாச்சார விளையாட்டுத்துறை உதவி அமைச்சர் சோமவீர சந்திரசிறிக்கு அளிக்கப்பட்ட வரவேற்புவிழாவில் உதவி அமைச்சர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டாக்டர் க. சிவஞானரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் ஆரம்பத்தில் உடும்பராய் கற்பகப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற விசேட பூசையில் கலந்து கொண்ட கௌரவ கலாச்சார உதவி அமைச்சர் கற்பகப்பிள்ளையார் கோவிலில் இருந்து மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். பூரண கும்பங்கள் வைத்து மலர் மாலை சூட்டி மக்கள் அவரை வரவேற்றனர்.

திரு. என். சர்வேஸ்வர மூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். டாக்டர் சிவஞானரத்தினம் தமது தலைமையுரையின்போது 'சிங்கள தமிழ்மக்களின் புராதன கலைகள், கலாச்சாரத்தை நன்குணர்ந்த கவிஞர் கலாச்சார உதவி அமைச்சர். அவர் ஓர் நல்லெண்ணத் தூதுவராகவே தமது அரசியல் வாழ்க்கையை நடத்தி வந்துள்ளார்' என்றார்.

ஆசிரியர் திரு. சு. பஞ்சாட்சரம் பேசுகையில், "முற்காலத்தில் நமது நாட்டிலும் அயல் நாடுகளிலும் கலாச்சாரத்தை வளர்த்தவர்கள் புலவர்களே. நல்ல புலவர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படக் கூடியவரான சோமவீர சந்திரசிறி கலாச்சார உதவி அமைச்சராகப் பதவியேற்றமை மிகவும் வரவேற்கக்கூடியதே. விளையாட்டுத்துறையையும் கவனிக்கக்கூடிய சந்தர்ப்பம் கலாச்சார அமைச்சருக்கு இருப்பதும் மேலும் சந்தோஷத்தை ஏற்படுத்துகின்றது" என்றார்.

வடபிரதேச சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. மாதுரைராசா பேசுகையில், உதவி அமைச்சர் நமது நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தருவார் என்பதில் சந்தேகமில்லை கூட்டரசாங்கத்துக்கு நாம் எவ்வளவு ஒத்துழைப்பு நல்கின்றோமோ அவ்வளவுக்கு நன்மை பெற முடியும் என்றார்.

வேறு பலரும் பேசினர் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

...துறைமுகக் கடற்கரையில் தீர்த்தமாடும் வைபவமும் நடைபெற்றது இவ்வுற்சவத்தில் வில்லிசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

0 0 0

### நாடகவிழா

வேலணை தெற்கு ஐயனார் கலாமன்றத்தினர் இம்மாத முடிவில் நாடகவிழாவொன்றினை நடாத்த ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

## பிரதமருக்கு வாழ்த்து

யாழ்ப்பாணம், புதன் 'பூரணமான சுதந்திரத்தை இலங்கை மாதாவின் மக்களுக்குப் பெற்றுத்தர புதுயுகப்பிரவேசம் செய்திருக்கும் நீங்கள் முழுவெற்றியடைய நல்லூர்க் கிளையின் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்' என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நல்லூர்க்கிளை பிரதமர் சிறிமாவுக்கு தந்திமூலம் செய்தி அனுப்பிவைத்துள்ளது.

## உதவி மந்திரி நயினாதீவு செல்வார்

யாழ்ப்பாணம், புதன் கலாச்சார உதவி அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறீ இம்மாதம் 26-ந் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பாரென்று யாழ் மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு எம். நடராசா தெரிவித்தார்.

இம்மாதம் 24-ந் திகதி முழுவதும் அமைச்சர் காங்கேசன்துறைத் தொகுதியில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வாரென்றும் இதன் காரணமாக அன்று மாலை கொடிகாமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வரவேற்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 25-ந் திகதி அமைச்சர் நயினாதீவு செல்வாரென்றும் அவர் மேலும் கூறினார். .....

...காட்டை அழித்து தென்னை பயிரிடாமையால் இடையில் கைவிட்டு நட்டமடைய நேரிட்டது. ஆனால் பலர் விடாதுமுயன்றதின் பயனாக தென்னந்தோப்புகளை உருவாக்கிப் பயன்பெறும் அசுர சாதனையைக்காணும் ஒவ்வொருவரும் அசந்து போவார்கள் என்பதில் ஐயமில்லை.

கடந்த பத்து ஆண்டுகளாக எடுத்த முயற்சியின் பயனாக அபிவிருத்தி செய்யபடாத சுமார் 1000 ஏக்கர் காணியை அரசாங்கம் மீண்டும் எடுத்து ஒருவருக்குப் 10 ஏக்கர்வீதம் வினியோகிப்பதற்கான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகியிருந்தது. இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்

1958-ம் ஆண்டு தொடக்கம் கிராஞ்சியில் தென்னஞ்செய்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன் எனது அனுபவத்திலிருந்து தென்னைச் செய்கைக்கு கிராஞ்சியைப்போல் சிறந்த இடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வேறு எங்குமே இல்லை என்று கூறமுடியும். ஆகவே இங்கு காணிகிடைப்பது பெரிய அதிர்ஷ்டமே.

தென்னையை நட்டு நாலு ஆண்டுகளில் பாளைவந்து காய்க்கத் தொடங்கிய ... யாழ்ப்பாணம் திரும்பிவிடலாம். ஐந்து ரூபா செலவாகும்

இக்காணியைப் பெற்று அபிவிருத்தியில் ஈடுபடுபவர்கள் பின்வரும் [illegible]மைகளைப் பெறக்கூடியதாய் இருக்குமென்பதை வற்புறுத்துதல் அவசியமாயுள்ளது.

1. வருமானவரிச் சட்டத்தின்படி இக்காணியில் செலவிடும் தொகைக்கு ஐந்து ஆண்டுகள் வரிச் சலுகை கிடைக்கும்.

2. சமீபத்தில் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணிச் சட்டத் திருத்தத்தின்படி இக்காணிக்குச் சொந்தமாக உறுதி முடித்துக்கொடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

3 இக்காணி அபிவிருத்தியில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களது விவசாய அபிவிருத்திக்காக வங்கியில் கடன் பெறவும் முடியும்.

சனப் பெருக்கமும், வேலையில்லாத் திண்டாட்டமும் காரணமாக நிலத்தின் தேவை அதிகரித்துள்ள சமயத்தில் கிராஞ்சியில் காணி கொடுப்பதற்கு ஏற்பாடாகியிருப்பது தமிழ்மக்களுக்கு, சிறப்பாக யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்குக் கிடைத்த அரிய வரப்பிரசாதமாகும்

## வேலையற்ற இசைக்கலைஞர்களுக்கு விரைவில் விமோசனம்

### உதவி அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், புதன் இசைக்கலைஞர்களாகிய உங்கள் வாழ்க்கையிலுள்ள கஷ்டங்களை நான் உணர்கிறேன். அக்கஷ்டங்கள் நீங்கி வெகுவிரைவில் உங்களுக்கு ஆசிரிய நியமனங்கிடைக்க சம்பந்தப் பட்டவர்களுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வேன்.

இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார் உதவிக் கலாசார அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறி.

நேற்று முன்தினம் கோப்பாய் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்கிளை அலுவலகத்தில் ஸ்ரீலங்கா இசைப்பட்டதாரிகள் சங்கம் தமக்களித்த வரவேற்பின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு வ. உருத்திரன் இக்கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் 1964 ல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருக்கும் பொழுது தான் இசைப் பட்டதாரிகளில் ஒரு சிலருக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. அதுபோலவே இப்பொழுது நடைபெறும் சுதந்திரக் கட்சி ஆட்சியிலும் எமக்கு ஆசிரிய நியமனங்கள் கிடைத்து. எம் வாழ்க்கையில் விடிவு ஏற்படும் என்றார்.

திரு கலியுகவரதன் தமது உரையில் 'கலை கலாச்சாரம் சம்பந்தமாக அரசாங்கத்தால் நியமிக்கப்படும் குழுவில் கர்நாடக சங்கீதம் தெரிந்த ஒருவரை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என உதவியமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

சங்கீத பூஷணம் திரு. போலின் சங்கீதக் கச்சேரியும் இடம்பெற்ற இவ்வரவேற்புவிழா முடிவில் வேலையற்ற இசைப்பட்டதாரிகளின் கஷ்டங்களை விரிவாக விளக்கும் மகஜரொன்றும் உதவிக் கலாச்சார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

...சார்பற்றிய நாங்கள் பேசிக் கொண்ட விஷயம்'' என்று உதவி அமைச்சர் சோமவீர சந்திரசிறி மேலும் கூறினார்.

நேற்று மாவை ஆதீன கர்த்தரையும் திரு. ஸி. சுந்தரலிங்கத்தையும் உதவி அமைச்சர் சந்தித்துப்பேசுவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது ஆனால் மாவை ஆலய விவகாரம் சம்பந்தமாக இருவழக்குகள் இன்னும் நீதிமன்ற விசாரணையிலிருப்பதால் அந்த வழக்குகளின் தீர்ப்பு வரும் வரை இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வது முறையல்லவென அமைச்சர் கருதி நேற்றுநடைபெறவிருந்த பேச்சுவார்த்தையை ரத்துச்செய்துவிட்டார்.

## இன்று விசாரணை

வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கும் மற்றும் 13 பொலிசாருக்கு மெதிராகவும் திரு. ஸி. சுந்தரலிங்கம் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனு மீதான விசாரணை இன்று நடைபெறவிருக்கிறது. பொலிசார் சார்பில் கொழும்பிலிருந்து பிரபல வழக்கறிஞர் ஒருவர் ஆஜராவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

...யுலகம் தடுமாறிச் சீரழிகிறது. அதனால் இத்தகைய ஆசிரியர்களிடம் கல்வி பெறும் நம் எதிர்கால மக்களாகிய இன்றைய மாணவர்களின் இளம் நெஞ்சங்களில் தாய்மொழிப்பற்றற்ற அடிமையுணர்வு தானாகவே பதிந்துவிடுகிறது.

இவ்வெட்கக் கேடான இழிநிலையினை சிந்திக்கும் திறம் படைத்த அனைவரும் உணரவேண்டும். சிறுதுளிகள் சேர்ந்து பெருவெள்ளமாதல்போல நமது அன்றாட சிறுகாரியங்களிலெல்லாம் தாய்மொழிக்கு முதலிடம் கொடுத்துப் பலப்படுத்த வேண்டும். அங்ஙனமெல்லாம் நாம் உறுதியுடன் செயற்பட்டால் நமது எதிர்காலம் சிறந்துமிளிருமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவ்வழியில் ஆர்வத்துடன் முன்செல்ல உதவி அமைச்சரின் புத்திமதி நமக்கு உதவவேண்டும்.

சு. மகாலிங்கம்,
அனலைதீவு.

0 0 0

## நலம்தானா?

சாவகச்சேரிப் பட்டின சபைக் கௌரவ உறுப்பினர் ஒருவர், சாவகச்சேரி-மந்துவில் ஊடாகப் பருத்தித்துறைசெல்லும் பஸ்வண்டிக் (பாதை இல 754) காப்பாளர் ஒருவருடன் பிரயாணிகளை ஏற்றும் விஷயமாகக் கருத்துவேற்றுமைகொண்டதாகப் பத்திரிகையில் படித் ... தொழிலாளர்களுடன் பொதுமக்கள் அபிப்பிராய பேதமடைந்தால் அவர்களின் கண்ணியமானகடமை சேவை என்பவற்றை நாம் இழக்கவரும்.

அன்றி, 190வது, நுணாவில் சந்திபோன்ற இடங்களுக்குச் செல்வதற்கு சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பலவேறுபஸ்வண்டிகள் உள இந்நிலையில் ஒரு பாதைக்காகஓடும் ஒரே ஒரு சிறியவண்டியில்தான் குறுகிய தூரமுள்ள இடமக்களும் செல்லவேண்டுமென விரும்புதல் நலந்தானா?

பொதுவாக வண்டிக்காப்பாளர்களும் மக்களின்மனோநிலை உலகத்தின் உதைப்பு ஆகிய விஷயங்களை ஓரளவு உன்னிப்பாகக் கவனித்து, இலைமறை காயாகஎல்லார்க்கும்இனியவராய் வாழப்பழகுதல் நல்லது.

கௌரவ அங்கத்தவர் கொண்ட கருத்து வேற்றுமையை மகிழ்ச்சியானமனோநிலையில் அலசி ஆராய்ந்து பார்த்து கருத்துவேற்றுமைகளைக் களைந்து, எல்லோரும்இன்பமுற இயன்றதைச் செய்யவேண்டும்.

"பிரயாணி"

0 0 0

## அவர்களை விடுங்கள்

ஆலயப்பிரவேசக் குழுவினருக்கு ஒருவேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். ஆகமங்களை முழுக்க முழுக்க நம்புபவர்கள் மனத்தை மாற்றலாம் என்று நினைத்து அவர்களை நெருங்காதீர்கள்; சீர்திருத்தக் கொள்கைகளை அவர்கள்மீது திணிக்காதீர்கள். அவர்களுடைய கொள்கைப்படி மனமாற்றத்துக்கு இடமேயில்லை. அவர்கள் விருப்பப்படி அவர்களை வாழவிடுங்கள். அவர்கள் கோயில்களை விரும்பினால் பகிஷ்கரியுங்கள். புதுக் கோயில்களை அமைத்து எல்லோரையும் சமமாக வழிபட விடுங்கள்.

செ. மயில்வாகனம்,
அளவெட்டி.

## ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், புதன் வலித்தூண்டல் புனித அன்னம்மாள் திருவிழா இம்மாதம் 21ந் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. 26ந் திகதி திவ்ய பாடற்பூசை வண. பிதா யோசப்புவினால் நிறைவேற்றப்படும்.

## புதிய அரசியலமைப்பில் செனட்சபை இருக்காது?

கோட்டை, செவ்வாய் புதிய அரசியலமைப்பின் கீழ் செனட் சபை ஒழிக்கப்பட்டுவிடும் என்று தெரிகின்றது.

செனட் சபை பிரிட்டிஷ் ஆட்சிமன்ற முறையின் அடிப்படையில் அமைக்கப்பட்டது இலங்கைக்கு முற்றிலும்தனித்தன்மையான அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதில் அரசாங்கமும் கூட்டணித் தலைவர்களும் அக்கறை கொண்டிருக்கிறார்கள் புதிய அரசியல் அமைப்பு நமது மக்களாலேயே உருவாக்கப்பட்டது என்று மாத்திரமன்றி நமது மக்களுக்கும் நமது பாரம்பரியங்களுக்கும் பெருமையும், மதிப்பும் தருவதாக அமையும் என்றும் கருதப்படுகின்றது.

இம்மாதம் 29-ம் திகதி அரசியல் நிர்ணய சபை கூடும்பொழுது சமர்ப்பிக்கப்படவிருக்கும் அரசியல் திட்டத்தில் செனட்போன்ற ஒரு சபை சம்பந்தமான ஷரத்துக்கள் இருக்கமாட்டாதென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவினால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்புத் திட்டத்தில் நாட்டின் சகல மக்களதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஷரத்து விசேஷமாக இடம்பெற்றிருக்குமென்று தெரிகின்றது.

ஆட்சிமன்றத்துக்கு சுதந்திரமான வாக்கெடுப்பின் மூலம் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கு வசதிகிடைப்பதுடன் புதிய அரசியல் சட்டத்தில், சிறுபான்மை மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று தெரிகின்றது.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிரவுன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org